# இந்து ஒளி

தீபம் - 27 சுடர் - 01
HINDU OLI



சோபகிருது வருடம் சித்திரை - வைகாசி
APRIL – MAY 2023

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress



23.12.2022 அன்று இந்துஒளி 26-03 இதழ் வெளியீடு



16.12.2022 அன்று நாவலர் விழாவும்
திரு. த. முத்துக்குமாரசாமி நாவலரைப் பற்றி ஆற்றிய
சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றன.



2023 தைப்பொங்கல்
நிகழ்வுகள் 15.01.2023
அன்று தைப்பொங்கல் தின
நிகழ்வுகள் மிக விமரிசையாக
மன்ற வளாகத்தில் பொங்கிச்
சூரியபகவானுக்குப் படைத்துப்
பிரார்த்தனை மண்டபத்தில் பூசை
வழிபாடுகள் இடம் பெற்றன.

10.01.2023 அன்று மாமன்றத்தின்
நிதிப் பங்களிப்புடன் கல்முனையின்
சிவநெறி அறப்பணி மன்றத்தின்
சமூகப்பணிகள்
பொங்கற் பொருட்கள் விநியோகம் &
பாடசாலை மாணவர்களுக்கு இலவச
அப்பியாசப் புத்தகங்கள் பகிர்ந்தளிப்பு.





சிவராத்திரி நான்கு சாமப்பூசைகளும் மாமன்ற
பிரார்த்தனை மண்டபத்தில் 18.02.2023
அன்று அனுட்டிக்கப்பட்டது.



இந்து மாமன்றத்தின் 2023 - 2024
சோபகிருது வருடத் தமிழ்ப் பஞ்சாங்கம்
31.03.2023 அன்று வெளியிடப்பட்டது.



கொஸ்லாந்தை
முத்துமாரியம்மன்
கோவிலுக்கான கூரைத்தகடு
விநியோகத்திற்கான
காசோலை 03.03.2023
அன்று கோயிலின்
அறங்காவலர்களிடம்
கையளிக்கப்பட்டது.



மன்ற வளாகத்தின் பிரார்த்தனை மண்டபத்தில
வருடாந்த நடேசர் அபிஷேகங்கள் 03.01.2023
அன்றும், 03.03.2023 அன்றும் நடைபெற்றன.

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 27 சுடர் - 01

சோபகிருது வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் (09.06.2023)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

தன்னைச் சரணென்று தாளடைந்
தேன்றன் அடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல்
செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை
கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ
லோகத் திருத்திடுமே.

### திருவாசகம்

கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும்.

### திருவிசைப்பா

சுருதிவா னவனாம் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பின்இந் திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கண்
பகவனாம் அகஉயிர்க்கு அமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள் மூன்றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

### திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

விழவ றாதன விளங்கொளி மணிநெடு வீதி
முழவ றாதன மொய்குழ லியர்நட வரங்கம்
மழவ றாதன மங்கலம் பொலிமணி முன்றில்
உழவ றாதநல் வளத்தன ஓங்கிருங் குடிகள்

## இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் இந்திய அரசு உடன் அக்கறை செலுத்த வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த நாள்முதல் தேசிய இனமாகிய தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்கதையாகத் தொடர்கிறது. சிங்கள அரசியல்வாதிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வருவது, பின்பு அவற்றை நிறைவேற்றாது விடுவது வழக்கமாகி விட்டது. இதன் விளைவாகவே இலங்கையில் பல தடவைகள் இனக்கலவரம் ஏற்பட்டது. இனக்கலவரத்தில் தமிழர்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். இச்சூழலில் தான் தமிழர் சார்பில் ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பமாகியது. சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமேல் ஆயுதப் போராட்டங்கள் நடைபெற்று அவற்றை எதிர்கொள்ளுவதற்காக ஆட்சிக்கு வந்த அரசுகள் கண்மூடித்தனமாகக் குண்டுவீச்சுக்களை நடாத்தி இலட்சக் கணக்கான அப்பாவி உயிர்கள் இறப்பதற்கு வித்திட்டன.

இலங்கையில் இன்றுவரை தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நேர்த்தியான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. இந்திய அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. தமிழர்களுக்குரிய சரியான சுயநிர்ணய உரிமையை உருவாக்குவதற்கு இந்தியா இதுவரை சீரிய முயற்சிகள் செய்யவில்லை. இதனால் ஆயுதப் போர் மௌனித்த பின்பும் தமிழர்களின் அவலம் தொடர்கிறது.

கௌரவ இந்தியப் பிரதமர் திரு நரேந்திரமோடி அவர்கள் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் உண்மையான அக்கறை செலுத்த வேண்டும். இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி மக்கள் நிரந்தர இருப்பிடமின்றி அவதியுற்ற வண்ணம் உள்ளனர். பிரித்தானியர்கள் தம் தேவைக்காக இம் மக்களை இலங்கைக்குக் கொண்டு வந்து இருநூறு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. இதுவரை மலையக மக்களுக்கு வீட்டுத் திட்டமோ, உழைப்புக்குரிய ஊதியமோ எதுவும் இல்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு இலங்கையில் வாழும் தமிழர்களின் சுதந்திர வாழ்வுக்காக இந்திய அரசு காலம் தாழ்த்தாது சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**வாழ்த்து**

கரிமுகன் கழல்கள் வாழ்க கந்தவேள் கருணை வாழ்க
அரியயன் காணொ ணாத அரனடி நீடு வாழ்க
விரிசடைப் பெருமானார் தம் அடியவர் எல்லாம் வாழ்க
பரிதிசூழ் பாடும் விண்ணும் பொலிவுடன் நீடுவாழ்க!

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணம் 1
- மாமன்றச் செய்திகள் 3
- திருமுறிகண்டித் திருப்பணி 6
- வைகாசி விசாகம் 7
- பாட அடைவு மட்ட செயற்திட்டம் - 2023 9
- சோழர் காலத்தில் சைவ சமயம் 15
- சித்தர்கள் 19
- முத்தி தரும் பன்னிரு திருமுறைகள் 21
- சாஸ்திரம் பிரமாணம் 23
- சீரிய வாழ்வுப் பாதை காட்டும் சைவம் 26
- கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு 29
- சித்திரா பௌர்ணமி 31



**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

**சித்திரை – வைகாசி 2023**

**HINDU OLI** | *Publication of* HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

**April - May 2023**



**ஆசிரியர் குழு :** சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
திரு. த. மனோகரன்
கலாநிதி த. முத்துகுமாரசாமி

**Editorial Board :** Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Mr. D. Manoharan
Dr. T. Muthukumarasamy



*ஒரு பிரதியின் விலை* ரூபா 250.00
*வருடாந்தச் சந்தா (உள்நாடு)* ரூபா 1000.00 (தபாற் செலவு தனி)
*வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* US டொலர் 30

Price Rs. 250.00
Annual Subscription (Inland) Rs.1000.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign) US $ 30 (Including Postage)



**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**தலைமையகம்:** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை :** 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk

**ALL CEYLON HINDU CONGRESS**

**Head Office:** 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

**Jaffna Office :** 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk



*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோர்களுடையதே.*

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**

# இந்து ஒளி

## மாமன்றச் செய்தி மடல்

All Ceylon Hindu Congress Newsletter


## முகாமைப் பேரவைக் கூட்டம்

நாடு தழுவிய ரீதியில் மாமன்றப் பேராளர்களும் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்ட முகாமைப் பேரவைக் கூட்டம் 24.01.2023 அன்றும் ஆண்டுப் பொதுக் கூட்டம் 25.02.2023 அன்றும் நடைபெற்றது. புதிய நிறை வேற்றுக் குழுவில் இடம் பெற்றிருக்கும் பதவி தாங்குனர்கள் -

| | |
|---|---|
| தலைவர்: | திரு மா. தவயோகராஜா |
| பிரதித்தலைவர்: | திரு சி. தனபாலா |
| பொதுச் செயலாளர்: | திரு வே. கந்தசாமி |
| பொருளாளர்: | திருமதி. அ. கயிலாசபிள்ளை |
| துணைத்தலைவர்கள் | திரு. த. மனோகரன் |
| | திரு த. முத்துக்குமாரசாமி |
| | திரு. மு. பவளகாந்தன் |
| | திரு. எஸ்.ரி.எஸ். அருளானந்தன் |
| | கலாநிதி ஆறு திருமுருகன் |
| | திரு. அ. மாணிக்கவாசகர் |
| | திரு வே. சந்திரசேகரம் |
| | கலாநிதி சிவஸ்ரீ |
| | ம. பாலகைலாசநாத சர்மா |
| | வைத்தியகலாநிதி |
| | மு. கதிர்காமநாதன் |
| பிரதிச்செயலாளர்: | திரு நீலகண்டன் பிரணவன் |
| துணைச் செயலாளர்கள்: | திரு ஜெ. நிரோஷ்காந்த் |
| | திரு. சா.மதிசுதன் |

## வாழ்த்துச்செய்திகள்

13.01.2023 அன்று வாவிபாளையம், பல்லடம், திருப்பூர், தமிழ் நாட்டைச் சேர்ந்த சைவம் மற்றும் தமிழ் மொழித் தொண்டாளரான திரு வெ. அனந்தகிருட்டிணன் அவர்களுக்கு, சுபகிருது ஆண்டு மார்கழி 25அன்று சிரவை ஆதீன குருமகாசன்னிதானம் அவர்களால் "திருநெறிய தமிழ்த் தொண்டர்" விருது வழங்கப்பட்டமை தொடர்பில் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரால் பிரத்தியேக வாழ்த்துச்செய்தி அனுப்பப்பட்டது. திரு அனந்தகிருட்டிணன் அவர்கள் இந்து மாமன்ற நிகழ்வுகளில் சிறப்புச் சொற் பொழிவாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரியதம்பனை, வவுனியாவில் அமைந்துள்ள ஸ்ரீவர சித்தி விநாயகர் ஆலயக் கும்பாபிஷேகம் 10.04.2023 அன்று நடைந்தேறியது. அகில இலங்கை இந்து மாமன்றத் தினரின் வாழ்த்துச் செய்தி 29.03.2023 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

தைப்பொங்கல் மற்றும் சித்திரைப் புத்தாண்டுக்கான மாமன்றத்தின் செய்திகள் பத்திரிகைகளுக்கு அனுப்பப் பட்டன.

## சமய, சமூக நிகழ்வுகள்

16.12.2022 அன்று நடைபெற்ற மதிய பூசையைத் தொடர்ந்து, நாவலர் விழாவும் நாவலரைப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றன.

23.12.2022 அன்று இந்துஒளி 26-03 இதழ் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களால் மதிய நேரப் பூசையின்போது வெளியிடப்பட்டது.

10.01.2023 அன்று **கல்முனையின் சிவநெறி அறப்பணி மன்றத்தினால் திருக்கோயில் பிரதேச வளாகத்தில்** மாமன்றத்தின் நிதிப் பங்களிப்புடன் நடைபெற்ற சமூகப்பணிகள்

(அ) வறிய குடும்பங்களுக்குப் பொங்கற் பொருட்கள் விநியோகம்

(ஆ) கோரக்களப்பு சக்தி வித்தியாலத்தில், திருக்கோவில் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்கள் பகிர்ந்தளிப்பு.

மாமன்றத் தலைவர் திரு மா. தவயோகராஜா, பொதுச் செயலாளர் திரு வே. கந்தசாமி, பொருளாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை ஆகியோர், காலிமுகத் திடலில், பழைய பாராளுமன்றக் கட்டடத்தின் அருகே அமைந்துள்ள **சேர் பொன். அருணாசலத்தின் சிலைக்கு மாலை அணிவித்து அன்னாரது 99வது நினைவு** தின நிகழ்வின் போது 09.01.2023 அன்று மாமன்றத்தின் சார்பாகவும் சேர் பொன். அருணாசலம் நம்பிக்கைப் பொறுப்பின் தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் என்ற ரீதியிலும் கலந்து சிறப்பித்தனர்.

**தைப்பொங்கல்** - 15.01.2023 அன்று தைப்பொங்கல் தின நிகழ்வுகள் மிக விமரிசையாக மாமன்ற நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், அடியவர்கள், மன்ற ஊழியர்களின் பங்களிப்போடு மன்ற வளாகத்தில் பொங்கிச் சூரிய பகவானுக்குப் படைத்துப் பிரார்த்தனை மண்டபத்தில் பூசை வழிபாடுகள் இடம் பெற்றன.

**சிவராத்திரி** நான்கு சாமப்பூசைகளும் மாமன்ற பிரார்த்தனை மண்டபத்தில் பக்தி பூர்வமாக 18.02.2023 அன்று அனுட்டிக்கப்பட்டது.

2023 சித்திரை - 2024 பங்குனி சோபகிருது வருட வாக்கிய, திருக்கணிதத் **தமிழ்ப் பஞ்சாங்கம்** 31.03.2023 அன்று மாமன்ற வளாகத்தில் உள்ள பிரார்த்தனை மண்டபத்தில் மாமன்ற நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களால் பூசை வழிபாடுகளின் போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

மன்ற வளாகத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் **நடேசர் அபிஷேகங்கள்** 03.01.2023 அன்று அமரர் நீலகண்டன் குடும்பத்தாரின் அனுசரணையிலும், 03.03.2023 அன்று அமரர் கயிலாசபிள்ளை குடும்பத்தாரின் அனுசரணையிலும் நடைபெற்றன.

**கொஸ்லாந்தை முத்துமாரியம்மன் கோவிலுக்கான கூரைத்தகடு** விநியோகத்திற்கான காசோலை 03.03.2023 அன்று மதிய பூசையின் பின் கோயிலின் அறங்காவலர்களிடம் மாமன்றப் பிரார்த்தனை மண்டபத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

19.03.2023 அன்று **பூனாகலையில் ஏற்பட்ட மண்சரிவு** அனர்த்தத்தில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 250 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். பூனாகலையில் இயங்கும் எமது அங்கத்துவச் சங்கம் ஒன்றிற்கு உடனடியாகக் கிடைக்கக் கூடிய வகையில் மாமன்றம் நிதியுதவி செய்தது.

**சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள்** 14.04.2023 அன்று மாமன்ற நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களால் பிரார்த்தனை மண்டபத்தில் பூசை வழிபாடுகளோடு அனுசரிக்கப்பட்டது.

**வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயக் கலாச்சார மண்டப அறிவிப்புப் பலகை** மாமன்ற நிதிப் பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

## நீங்காத நினைவலைகள்

இந்து மாமன்றத்தின் மதிப்பிற்குரிய தலைவர்களான, 19.02.2017 அன்று அமரரான மனிதநேய மாமனிதர் **அமரர் விசுவநாதர் கயிலாசபிள்ளை** மற்றும் 18.02.2018 அமரத்துவம் எய்திய அறநெறிக் காவலர், புகழ் பூத்த சட்டத்தரணி **அமரர் கந்தையா நீலகண்டன்** அவர்களின் **மறைவு நினைவாஞ்சலிகள்** 18.02.2023 அன்று வீரகேசரிப் பத்திரிகையில் மாமன்றத்தின் சார்பாகப் பிரசுரிக்கப்பட்டது.

**அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் நினைவுப் பேருரை** நிகழ்வு 26.02.2023 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாசி களோடு ஆரம்பமானது. மாமன்றத் தலைவர் திரு மா. தவயோகராஜாவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நினைவுப் பேருரை இலங்கைப் பல்கலைக் கழகச் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

மாமன்றத்தோடு நீண்ட காலம் தொடர்பிலிருந்து சமயத் தொண்டாற்றிய சிரேஷ்ட வங்கியாளர் **இரா.விசாகப் பெருமாள்** 07.04.2023 அன்று சிவபதமடைந்தார். அவர் மாமன்ற அங்கத்துவத்தைக் கொண்ட கதிர்காமத் தொண்டர் சபையின் துணைத் தலைவர்களுள் ஒருவர். அமரர் இரா.விசாகப் பெருமாளின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருடனும் மாமன்றத்தின் சோகத்தைப் பகிர்ந்து கொண்டோம்.

## கண்டனங்கள்

போதை வஸ்துப் பாவனையால் சீரழிந்து போய்க்கொண்டிருக்கும் இளைய சமூகத்தினரை மீட்டெடுக்கும் வழிவகைகளை மையப்படுத்தி மாமன்றத்தின் ஆக்கம், 04.01.2023 அன்று தினக்குரல் பத்திரிகையில் வெளியானது.

வரலாற்றுச் சிறப்புமிக்க வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரம் இடித்தழிக்கப்பட்டது தொடர்பாக மாமன்றத்தின் கண்டனம்

வீரகேசரிப் பத்திரிகையில் 29.03.2023 அன்றும் தினக்குரல், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் 30.03.2023 அன்றும் பிரசுரமானது. தொடர்ந்து, இந்த ஆலய அழிப்புத் தொடர்பாக ஆதி லிங்கேஸ்வர ஆலய நிர்வாகத்தினருடன், மாமன்ற நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்களும் இணைந்து கொழும்பின் இந்தியத் தூதரகத்தில் இந்தியத் தூதுவரைச் சந்தித்திருந்தனர்.

இச்சந்திப்புத் தொடர்பாக வலம்புரிப் பத்திரிகை 11.04.2023 அன்று செய்தி வெளியிட்டிருந்தது.

## திருமுறிகண்டியில்
## அகில இலங்கை இந்து மாமன்ற வன்னி அலுவலகம்

திருமுறிகண்டியில் சரவணப் பொய்கையுடன் கூடிய முருகப்பெருமான் திருப்பீடமும் ஏ-9 வீதியிலே செல்பவர்களுக்கு அருள் பாலிப்பதற்கான 20 அடி உயரமான முருகப்பெருமானின் திருவுருவமும் சிற்றுண்டிச் சாலை மற்றும் கழிவறை உள்ளடங்கலான வசதிகளுடன் அகில இலங்கை இந்து மாமன்றத் திருமுறிகண்டி அலுவலகம் **09-06-2023** அன்று திறந்து வைக்கப்படுகிறது.

ஏ-9 வீதியிலே பிரயாணம் செய்யும் எல்லோரும் திருமுறிகண்டியில் எம்பெருமானைத் தரிசித்து அருள் பெற்றுச் செல்லுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் எம்மக்களை வினயமாகக் கேட்டுக் கொள்கிறது.





# அகில இலங்கை இந்துமாமன்றத்தின் திருமுறிகண்டித் திருப்பணி

வன்னிப் பிரதேசத்தில் வாழும் சைவ மக்களுக்கு உதவும் பொருட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் வன்னியில் ஓர் அலுவலகத்தைத் திறக்கவேண்டும் எனப் பலர் கோரிக்கை விடுத்தனர். இந்து மாமன்றத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராகிய கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் A9 கண்டி வீதியில் முறிகண்டிப் பிள்ளையாருக்கு சமீபமாக இருந்த அரச காணியைத் தந்துதவுமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலரிடம் வேண்டுதல் விடுத்திருந்தார். பிரதேச செயலர், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் பூரண ஒத்துழைப்பை வழங்கியதன் விளைவாக A9 வீதியில் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு இக் காணி கிடைத்தது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக விளங்கிய அமரர் திரு கந்தையா நீலகண்டன் அவர்கள் வன்னி அலுவலகக் கட்டடப் பணியை விரைவாக ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்தார். ஊரெழுவைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தக்காரர் அமரர் க.சண்முகநாதன் இத்திருப்பணி வேலையை முன்னெடுத்து அமைத்தார். மேலும் அலுவலக கட்டடப் பணியோடு அலுவலக வளாகத்தில் ஆறுபடை வீடுடைய முருகப்பெருமானுக்கு ஓர் பீடம் அமைத்துப் பொதுமக்கள் வழிபாடு செய்ய வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என இந்துமாமன்ற நிர்வாக சபை தீர்மானித்தது.

## திருமுறிகண்டி ஆறுபடை வீடு



இப் பாரிய திருப்பணி ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. சுமார் இருபது அடிக்கு மேல் உயரம் கொண்ட முருகப்பெருமானின் உருவச்சிலை இந்தியச் சிற்பக்கலை வல்லுநர் திரு. க.புருஷோத்தமனால் உருவாக்கப்பட்டது. மேலும் அறுகோண அமைப்பைக் கொண்ட ஆறுபடை வீடுகளில் உள்ள தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்வதற்காக அழகான மண்டபம் கட்டப்பட்டுள்ளது. சரவணப் பொய்கை போன்று கீழ்ப்பகுதியில் தண்ணீர்த் தடாகமும் அமைக்கப்பட்டது. இந்தியா கும்பகோணத்தில் இருந்து ஆறுபடை வீடுகள் என அழைக்கப்படும் முருகப் பெருமானின் ஆறு திருக்கோயில்களில் உள்ள மூலமூர்த்தியை ஒத்ததாக ஐம்பொன்னால் விக்கிரகங்கள் செய்யப்பட்டு மாமன்றத்தால் அவை இங்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. ஆரம்பத்தில் வன்னி அலுவலகத்துக்கு ஆறுதிருமுருகன் அடிக்கல் நாட்டினார். ஆறுபடை பீட மண்டபத்துக்கு அமரர் கந்தையா நீலகண்டன் தலைமையில் ஆன்மீகச்சுடர், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அடிக்கல் நாட்டினார். இக்கட்டடத் திருப்பணியில் ஆர்வம் கொண்டுழைத்த அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் அவர்களுடைய திடீர் மறைவைத் தொடர்ந்து கட்டட வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்த திரு க.சண்முகநாதனுடைய மறைவும் மாமன்றத்திற்குப் பெரும் கவலையை அளித்தன.

## முறிகண்டிச் சிற்றுண்டிச் சாலை

இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் திரு.கைலாசபிள்ளை அவர்களும், அவரது பாரியார் அபிராமி கைலாசபிள்ளை அவர்களும் முறிகண்டியில் நல்ல சிற்றுண்டிச் சாலையையும் நவீன மலசலகூட வசதியையும் வன்னி அலுவலகத்தில் உருவாக்கவேண்டும் என்ற கருத்தினை மாமன்றக் கூட்டத்தில் முன்வைத்தார்கள். அவர்களது கருத்தை ஏற்ற மாமன்றம் சிற்றுண்டிச் சாலையையும், நவீன வசதிகொண்ட மலசலகூடத்தையும் உருவாக்கி உள்ளது.

திருமுறிகண்டியில் அமைந்துள்ள இந்து மாமன்ற வன்னி அலுவலகம் வன்னிப் பிரதேசத்தில் சைவ சமய வளர்ச்சிக்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் வன்னி மாமன்ற அலுவலகத்தில் சிறிய அளவில் ஓர் நூல் நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாரிய பணி எதிர்காலத்தில் பலருக்கும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை.



# வைகாசி விசாகம்

வைகாசி மாதமென்பது சூரியனின் கதிர்கள் இப்பூமியை சுட்டெரிக்கும் ஒரு காலமாகும். அதே நேரத்தில் பல ஆலயங்களில் தெய்வீக விழாக்களுக்கு மிக உகந்த மாதம் ஆகும். அதிலும் குறிப்பாக முருகப்பெருமானை வழிபடுவதற்கு ஏற்ற மாதமுமாகும்.

வைகாசி விசாக தினத்தினை அனிலநாள், சோதிநாள் எனவும் குறிப்பிடுவதுண்டு. வானசாத்திரத்தில் இருபத்தேழு நட்சத்திரங்களில் விசாகமும் ஒன்று. சூரபதுமன் முதலான அசுரர்களின் கொடுமைகளைத் தாங்கலாற்றாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று தமது குறைகளை முறையிட்டனர். கருணைக்கடலாகிய சிவபிரான் அசுரர்களுடைய கொடுமை களினின்று அவர்களைக் காத்தருளத் திருவுளங் கொண்டார். தமது ஆறு முகங்களிலுமுள்ள நெற்றிக்கண்ணின்றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தார். அவ் ஆறு பொறிகளும் வாயு, அக்கினி, தேவர்களினால் கங்கையில் கொண்டு சென்று விடப்பட்டன. கங்கை சரவணப் பொய்கையில் கொண்டு வந்து சேர்த்தது. சரவணப் பூந்தடாகத்திலே ஆறு பொறிகளும் ஆறு திருக்குழந்தைகளாகி விளங்கின. விஷ்ணுமூர்த்தி, கார்த்திகை முதலிய கன்னியர்கள் மூலமாக அக்குழந்தைகட்குப் பாலூட்டு வித்தார். ஆறு பொறிகளும் திருக்குழந்தைகளான தினம் வைகாசி மாதத்து விசாகநாள் ஆகும்.

ஆறுமுகப்பெருமான் அவதரித்த தினமாதலின் வைகாசி விசாகம் விசேட தினமாகக் கொண்டாடப்படுகின்றது. உலகத்து உயிர்கள் யாவும் உய்யும் பொருட்டு எம்பிரானே தன் திருவிளையாடலால் குழந்தையான நாளாதலின் சைவமக்கள் வழிபாட்டிற்கு இந்நாள் மிகவும் சிறந்ததாகும். இத்தினத்தில் கோயில்களில் வசந்தோற்சவமும், பிரமோற்சவமும் நடைபெறும். இந்நாளில் திருசெந்தூரில் மிகவும் சிறப்பான வழிபாடு நடை பெற்று வருகின்றது.

இத்தினம் பல சமயத்தாருக்கும் ஒரு புனித நாளாகும். வைணவத்தில் நம்மாழ்வார் அவதார நாளாகவும் இந்நாள் கொண்டாடப்படுகின்றது.

நவக்கிரகங்களில் குரு பகவானின் அருளும்,சிவனுக்கு பிரணவ உபதேசம் செய்து "சிவகுருநாதன்" என்று பெயர்பெற்ற முருகப்பெருமானின் அருளும் நிறைந்த தினம் "வைகாசி விசாகம்". இத்தகைய சிறப்பான தினத்தில் விரதம் இருந்து, முருகப் பெருமானின் ஆலயங்களுக்குச் சென்று அவருக்குத் தேன், இளநீர் போன்றவற்றால் அபிஷேகங்கள் செய்து, அக்கோவிலில் சித்திரா அன்னம், தயிர் அன்னம் போன்றவற்றைத் தானம் அளித்து, முருக மூல மந்திரங்கள், சண்முகக் கவசம் ஆகியவற்றைப் படித்து முருகனை வணங்க வேண்டும்.

இப்படிச் செய்வதால் நமது மனதிற்குள்ளிருக்கும் தீய எண்ணங்கள் என்ற அரக்கனையும், வெளியில் நமக்கு கேடு நினைப்பவர்களின் பகையையும் அம்முருகப்பெருமான் அழித்து, நமக்கு நல்ல செல்வ வளத்தையும் நற்சந்ததிகளையும் நீண்ட ஆயுளையும் அருள்வார்.

## வழிபாட்டு முறை :

வைகாசி விசாக நாளில் அதிகாலை எழுந்து நீராடி முருகா எனக் கூறி விபூதி அணிந்து கொண்டு முருகன் படத்தின் முன்நின்று முதலில் விநாயகர் அகவல் பாடிக் கணபதியை வழிபட வேண்டும். பின் முருகனுக்குரிய ஸ்லோகங்கள், கந்தசஷ்டிக் கவசம், கந்தகுரு கவசம், கந்தர் அனுபூதி, சுப்ரமணியஷோடச நாமாக்கள் கூறி அர்ச்சித்துத் தூபதீபம் காட்டி நைவேத்யம் செய்து வழிபட்டால் முருகனின் அருள் பரிபூரணமாகக் கிட்டும். வைகாசி விசாகத்தன்று கோயிலுக்குச் சென்று வழிபட்டால் வீட்டில் உள்ள குழந்தைகள் அறிவில் சிறந்து விளங்குவார்கள். மழலைப்பேறு, புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்குக் கிட்டும்.

## வைகாசி மாதத்தின் சிறப்புகள் சில...

- வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திர நாள், முருகப் பெருமான் அவதரித்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. இதனை வேனில் விழா என்று கொண்டாடப்படுவது வழக்கம்.
- சிம்மாசலம் என்னும் ஊரில் குன்றின் மேல் நரசிம்மர் கோயில் கொண்டுள்ளார். ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தன்றுதான் அப்பெருமானைக் காண இயலும். பின்பு சந்தனக்காப்பிட்டு வைத்து விடுவார்கள்.
- வைகாசிவிசாகம்புத்தர்அவதரித்தநாளாகவும் கூறப்படுகிறது. சித்தார்த்தர் புத்தரானதும், நிர்வாணமடைந்ததும் இதே நாளன்றுதான்.
- எமதர்மன் அவதரித்த நாளும் வைகாசி விசாகம் தான் என்பார்கள். இந்நாளில் எமனுக்குத் தனிப் பூசை சில

ஆலயங்களில் நடப்பதுண்டு. எம பூஜை செய்வதால் நோய்கள் நீங்கி நீண்ட ஆயுளுடன் வாழலாம் என்பது நம்பிக்கை.

- இந்திரன் வைகாசி விசாகத்தன்று சுவாமிமலை முருகனை வழிபட்டு ஆற்றல் பெற்றான்.
- திருமழபாடியில் ஈசன் வைகாசி விசாக நாளில் திருநடனம் புரிகிறார்.
- திருச்செந்தூரில் வைகாசி விசாகம் பத்து நாட்கள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.
- நாயன்மார்களுள் கழற்சிங்கர், சோமாசி மாறர், திருஞான சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர், முருகநாயனார், நமிநந்தியடிகள் ஆகியோர் அவதரித்ததும் வைகாசி மாதத்தில்தான்.
- பெரிய புராணம் அருளிய சேக்கிழார் சுவாமிகளும் வைணவப் பெரியாரான நம்மாழ்வாரும் அவதரித்தது இந்த மாதத்தில் தான்.
- திருத்தணியில் பல தீர்த்தங்கள் உள்ளன. இதில் குமார தீர்த்தமும் ஒன்று. இதில் வைகாசி விசாகத்தன்று நீராடி முருகப் பெருமானை வழிபட்டால் சகலவிதமான தோஷங்களும் நீங்கும் என்று சொல்லப்படுகிறது.
- வைகாசி மாத சுக்லபட்ச ஏகாதசியன்று விரதம் இருப்பதால், ஆசைகள் ஈடேறி முடிவில் முக்தி கிடைக்கும்.
- வைகாசிக் கிருஷ்ணபட்ச ஏகாதசியன்று விரதம் அனுஷ்டித் -தால் வித்யாதானம் (சன்மானமின்றி கல்வியறிவித்த) செய்த பலனைத் தருவதுடன் எதிர்பாராத ஆபத்துகளில் இருந்தும் நம்மைக் காப்பாற்றும்.
- வைகாசி மாத அஷ்டமிக்குச் சதாசிவாஷ்டமி என்று பெயர். அன்று இடபாரூடராகிய சிவமூர்த்தியை எண்ணி விரதமிருப்பர். வெறும் நீரை நிவேதனம் செய்து அதையே குடிக்கவேண்டும். அதன் பலனாகச் செய்த பாவங்கள் அனைத்தும் போகும்.
- கதிர்காமத்தில் செப்பு ஓடால் வேயப்பட்ட கொட்டகைதான் முருகனின் கோயில். முன் வாசலில் குதிரைகள் உள்ளன. 7-வது திரையில் முருகன் மயில் மீது இருதேவியருடன் அமர்ந்த ஓவியம் உள்ளது. திரைக்குப் பின் பெட்டியில் சடாட்சர மந்திரம் யந்திர வடிவில் உள்ளது. இங்கு பூஜை அபிஷே கம் யாவும் மரகதவேலுக்குத்தான் நடைபெறும். இங்கு நடைபெறும் வைகாசி விசாக விழாவில் ஆறுமுகப்பெருமான் புறப்பாடு மிகப்பிரபலம் வாய்ததொன்றாகும்.

(தொகுப்பு : பூரணி அரவிந்தன்)

# திருப்புகழ்

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே.

# கதிர்காமத்து மணிச்செஞ்சோதி

வேதமுடி மீதிருந்த தாளாய் நீயே
விளங்குமணி மந்திரமா விளைந்தோய் நீயே
கூதனமா முடியனருள் பாலன் நீயே
குமரகுரு பரனெனும்பேர் கொண்டோன் நீயே
வாதமிலா மோனமுனி வோர்தம் நெஞ்ச
மாக்கோயில் நடஞ்செய்யும் குமரன் நீயே
காதலுறு வள்ளியணை நாதன் நீயே
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி!

ஞாலமெலாம் ஆக்கியளித் தழிப்போன் நீயே
நாடுதிரோ பவஞ்செய்தே அருள்வோன் நீயே
நிலமெலாம் ஒருங்கமைந்த மயிலின் மீதே
நினைக்குமடி யார்க்கருள வருவோன் நீயே
ஏலமெலாம் மணந்தகுழல் வள்ளி தெய்வ
யானை யெனும் கொடிபடரும் தாருநீயே
காலமெலாம் கடந்துநின்ற கந்தன் நீயே
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி!

கி.வா.ஜகந்நாதன். (நன்றி:- கதிர்காம யாத்திரை-1953)

# இந்து வித்தியா விருத்திச்சங்கமும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நடாத்திய

## 11 ஆம் ஆண்டு மாணவர்களின் பாட அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம் – 2023

### அறிமுகம்

இந்து வித்தியா விருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம் இரண்டின் நோக்கமும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதும் அத்துடன் நம்மவர்களின் துயரைத் துடைப்பதுமேயாகும். அந்த வகையிலே பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அதிபர் எம்மிடம் தமது கல்லூரி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவ வேண்டும் என 25-11-2022 அன்று ஒரு கோரிக்கையை விடுத்தார்கள்.

அந்த அடிப்படையில் இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. வே.கந்தசாமி, இந்து வித்தியாவிருத்திச் சங்கத் தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத்தலைவருமாகிய திரு. த.முத்துக்குமாரசாமி, உப பொருளாளர் திரு. க. குசலகுமார், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. மணிமாரன் ஆகியோர் சரஸ்வதி மண்டபத்தில் 27-11-2022 பிற்பகல் 4.00 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

அதன்படி கடந்த 2021 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 30 வீதமான மாணவர்கள் தமிழ்மொழி, சைவநெறி ஆகிய பாடங்களில் சித்தி அடையாத நிலையை உணர்ந்தோம்.

அதன்படி, இந்துக்கல்லூரி மட்டுமல்ல இதனோடு அண்மையில் உள்ள மேலும் ஏழு பாடசாலைகளையும் இணைத்துப் பரீட்சார்த்தமாக அப்பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் மூலம் 2022 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களுக் கான 'தமிழ்மொழியும் இலக்கியமும்', சைவநெறி ஆகிய பாடங்களுக்குரிய வினாத்தாள்களைத் தயாரித்துப் பரீட்சை களை வைத்து மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி ஏனைய பாடசாலை அதிபர்களுடனும் 28-11-2022 அன்று கலந்துரையாடிச் சாதகமான ஒருமித்த கருத்துக்கு வந்தோம். மேலும் உடனடியாக அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கும் வந்தோம். அனைத்துப் பாடசாலை அதிபர்களும் தத்தமது பாடசாலை ஆசிரியர்கள் மூலம் வினாத்தாள்களைத் தயாரித்துத் தந்துதவினார்கள். அதன்படி எமது இரு அமைப்புகளும், திருமதி அ. கயிலாயபிள்ளை அவர்களின் உதவியுடன் வினாத்தாள்களை அச்சுப் பிரதி செய்து கொடுத்தோம்.

### கொழும்பு மாவட்டக் கருத்தரங்குப் பணிகள்

பாடசாலை ரீதியாக 20-11-2022 அன்று 'தமிழ் மொழியும் இலக்கியமும்' பாடத்திற்குப் பரீட்சை நடாத்தப் பட்டு அதற்கான செயல்அமர்வு 07-12-2022 அன்று பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தில் தெகிவளை தமிழ் வித்தியாலய ஆசிரியர் திரு. தி. திவாகரன் அவர்களால் நடாத்தப்பட்டது.

அவ்வாறே சைவநெறிப்பாடப் பரீட்சை 30-11-2022 இல் நடாத்தப்பட்டு அதற்கான செயலமர்வு சைவமங்கையர் வித்தியாலய ஆசிரியர் திரு. அ. வாசுதேவன் அவர்களால் 08-12-2022 அன்று நடாத்தப்பட்டது.

பரீட்சைக் கருத்தரங்கு வெற்றிகரமாக நடாத்தப் பட்டமையைத் தொடர்ந்து அதிபர்களுடனான கலந்துரை யாடல் நடைபெற்றது. இதன்போது முதல் முயற்சிக்குப் பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்ததோடு தொடர்ந்து 'தமிழ் மொழியும் இலக்கியமும்',சைவநெறி ஆகிய பாடங்களுடன் கணிதம், விஞ்ஞானம், ஆகிய பாடங்களையும் நடாத்துவது சிறப்பானதெனவும் மேலும் இப் பாடங்களினது 2021 ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் பெரும்வீழ்ச்சியைக் கண்டுள்ளதெனவும் தெரிவித்தனர்.

அத்துடன் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சைகளையும் நடாத்தினால் அதன் பெறுபேற்றையும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்தனர். இக்கோரிக்கை சகல தரப்பினராலும் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் இப் பரீட்சைக்கான ஒரு குழுவும் நியமிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இக்குழுவின் செயலாளராக செல்வி இ. பகீரதி (பம்பலப் பட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இரண்டாம் கட்டப் பரீட்சையும், கருத்தரங்குகளும் பின்வரும் ஒழுங்கில் நடாத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

**இந்து வித்தியா விருத்திச்சங்கமும், அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நடாத்திய 11 ஆம் ஆண்டு மாணவர்களின் பாட அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான செயல் திட்டம்–2023**

**தரம் 11 பரீட்சையும் கருத்தரங்கும்**

| பரீட்சைத் திகதி | பரீட்சைத் தொடர் | கணிதம்,விஞ்ஞானபாடப் பரீட்சையும்இகருத்தரங்கும் நடைபெறும் திகதிகளும் | தமிழ்மொழி, சைவநெறிப் பாடப் பரீட்சையும் கருத்தரங்கும் நடைபெறும் திகதிகளும் |
|---|---|---|---|
| 20-11-2022 | பரீட்சை -1 | கருத்தரங்கு - 20-11-2022 | பரீட்சை –கருத்தரங்கு -07-12-2022 |
| 30-11-2022 | பரீட்சை -2 | கருத்தரங்கு - 30-11-2022 | பரீட்சை –கருத்தரங்கு -08-12-2022 |
| 21-01-2023 | பரீட்சை -3 | கருத்தரங்கு - 23-01-2023 | பரீட்சை –கருத்தரங்கு -24-01-2023 |
| 29-01-2023 | பரீட்சை -4 | கருத்தரங்கு - 30-01-2023 | பரீட்சை –கருத்தரங்கு -31-01-2023 |
| 05-02-2023 | பரீட்சை -5 | கருத்தரங்கு - 06-02-2023 | பரீட்சை –கருத்தரங்கு -07-02-2023 |
| 12-02-2023 | பரீட்சை -6 | கருத்தரங்கு - 13-02-2023 | பரீட்சை –கருத்தரங்கு -14-02-2023 |
| 19-02-2023 | பரீட்சை -7 | கருத்தரங்கு - 20-02-2023 | பரீட்சை –கருத்தரங்கு -21-02-2023 |
| 26-02-2023 | பரீட்சை -8 | கருத்தரங்கு - 27-02-2023 | பரீட்சை –கருத்தரங்கு -28-02-2023 |
| 05-03-2023 | பரீட்சை -9 | கருத்தரங்கு - 06-03-2023 | பரீட்சை –கருத்தரங்கு -07-03-2023 |
| 12-03-2023 | பரீட்சை -10 | கருத்தரங்கு - 13-03-2023 | பரீட்சை –கருத்தரங்கு -14-03-2023 |

- பரீட்சைகள் யாவும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகியது ஞாயிற்றுக்கிழமைகளில் கணித பாடப் பரீட்சைகள் இடம்பெற்று அவற்றிற்கான விளக்கக் கலந்துரையாடல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நடைபெற்றது.
- ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணிக்கு விஞ்ஞானப் பாடப் பரீட்சைகள் இடம்பெற்று,அதனைத் தொடர்ந்து விளக்கக் கருத்தரங்கு நடைபெற்றது.
- கணிதம் மற்றும் விஞ்ஞான பாடப் பரீட்சைகள்,கலந்துரையாடல்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெவ்வேறாக நடைபெற்றது.
- 'தமிழ்மொழியும் இலக்கியமும், சைவநெறி ஆகிய பாடப் பரீட்சையும் கருத்தரங்கும் மேற்காட்டிய திகதிகளில் நடைபெற்றன.

## அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டக் கல்விக் கருத்தரங்குகள்

எமதுமுதலாம்,இரண்டாம் கட்டச் செயற்பாடுகளை அறிந்து அம்பாறை,முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள் தங்களுடைய ஆசிரியர்பற்றாக்குறை, மற்றும் நிகழ்நிலைக் கல்வி மூலம் தங்கள் பிள்ளைகள் பயன்பெறமுடியாத நிலை, பிள்ளைகளின் வறுமைநிலை என்பவற்றை எடுத்துக்காட்டித் தங்களது பிள்ளைகளுக்கும் இக்கருத்தரங்கை நடாத்தி அவர்கள் பயனடைய ஆவனசெய்யும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அவர்களது கோரிக்கை நியாயமானதென ஏற்றுக்கொண்டு மூன்றாம் கட்டமாக அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் கல்விவலயம், முல்லைத்தீவுமாவட்டத்தின் துணுக்காய்க் கல்விவலயம், முல்லைத்தீவுக் கல்விவலயம்,மற்றும் வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்குக் கல்விவலயம் ஆகியவற்றுக்கும் கருத்தரங்குகளைநடாத்துவதற்கு முடிவு செய்தோம். இதன்போது இந்துமாமன்றத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான திரு.சி.சரவணபவன்,திரு. சி.சந்திரபவன் ஆகியோர் திருக்கோவில் கல்விவலயத்தில் நடைபெறும் செயலமர்வுகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தரமுன்வந்தனர்.

ஏனைய வடமாகாணத்தில் நடைபெறும் செயலமர்வுகளுக்கான கருத்தரங்கை வடமாகாணக் கல்விஅமைச்சின் செயலாளர் மற்றும் குறித்த வலயத்திற்கான கல்விப் பணிப்பாளர்கள் மூலம் அனுமதிபெற்றுச் செவ்வனே நடாத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டோம். இதன்போது தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் பயிற்சிக் கருத்தரங்கையும்செய்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டோம்.

## அம்பாறை மாவட்டக் கருத்தரங்குப் பணிகள்

07-04-2023 மற்றும் 08-04-2023 ஆகிய இருதினங்களும் அம்பாறை, திருக்கோவில், அக்கரைப் பற்றுக் கல்விவலயப் பாடசாலைகளில் கருத்தரங்கை முன்னெடுத்தோம். இதன்போது திருக்கோவில் சக்தி வித்தியாலயம், திருக்கோவில் மத்திய மகாவித்தியாலயம், தம்பிலுவில் மகாவித்தியாலயம், பசுபதேஸ்வரர் வித்தியாலயம், பனங்காடு திருநாவுக்கரசு வித்தியாலயம்,(ஆலையடிவேம்பு), விநாயகர் மத்தியமகாவித்தியாலம்,(அக்கரைப்பற்று) ,மெதடிஸ்ட் மிஷன் தமிழ் மகாவித்தியாலயம்ஆகிய ஏழு நிலையங்களில் மாணவர்களுக்கான அச்சிட்ட வினாத்தாள்களை வழங்கி எமது வளவாளர்களை அழைத்துச்சென்று சிறந்த முறையில் கருத்தரங்கை நிறைவுசெய்தோம். **இக் கருத்தரங்கில் 20 பாடசாலைகளைச் சேர்ந்த 350 மாணவர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.**

## முல்லைத்தீவு மாவட்டக் கருத்தரங்குப் பணிகள்

09-04-2023, 10-04-2023 ஆகிய இரு தினங்களும் துணுக்காய்க் கல்விவலயத்தில் எமது கருத்தரங்குப் பணி

நடைபெற்றது. ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் ஆறு பாடசாலைகளைச் சேர்ந்த 180 மாணவர்களும், துணுக்காய்க்கோட்ட கல்விவலயத்தைச் சேர்ந்த யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில்08 பாடசாலைகளைச் சேர்ந்த 182 மாணவர்களும்,மாந்தை கிழக்குக் கோட்டக் கல்விவலயப் பிரிவைச் சேர்ந்த பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலம் ஆகிய இருபாடசாலைகளில்ஏனைய அப்பிரதேச 04 பாடசாலைகளைச் சேர்ந்த 97 மாணவர்களும்வலயக்கல்விப் பிரிவைச் சேர்ந்த மாங்குளம் மகாவித்தியாலயம், ஒலுமடு தமிழ் வித்தியாலயம், ஆகிய இருபாடசாலைகளில் 06 அண்மைப் பாடசாலைகளைச் சேர்ந்த 111 மாணவர்களுமாக மொத்தமாக 24 பாடசாலைகளைச் சேர்ந்த 571 மாணவர்கள் மேற்குறித்த கருத்தரங்கில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் போது தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கில் ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப்பிரிவிலுள்ள பண்டாரவன்னியன் மகாவித்தியாலயத்தில் 12 பாடசாலைகளைச் சேர்ந்த 195 மாணவர்களும், மாந்தை கிழக்குக் கோட்ட கல்வி அலுவலகப் பிரிவின் 12 பாடசாலைகளைச் சேர்ந்த 119 மாணவர்களும், வலயக்கல்விப் பிரிவில் 13 பாடசாலைகளைச் சேர்ந்த158 மாணவர்களுமாக மொத்தமாக 55 பாடசாலைகளைச் சேர்ந்த 642 மாணவர்களும் சிறப்பாகப் பங்குபற்றிப் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

11-4-2023, 12-4-2023 ஆகிய இரு தினங்களும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் எமது கல்விச்சேவையைத் தொடர்ந்து மேற்கொண்டோம். முல்லைத்தீவு கோட்டக்கல்விப்பிரிவைச் சேர்ந்த உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் 05 பாடசாலைகளைச் சேர்ந்த 286 மாணவர்களும், வள்ளிபுனம் மகாவித்தியாலயத்தில் 04 பாடசாலைகளைச் சேர்ந்த 125 மாணவர்களுமாகமொத்தம் 411 மாணவர்கள் கலந்து கொண்டனர்.கரைத்துறைப்பற்றுக் கோட்டத்தைச் சேர்ந்த சிலாவத்தைத் தமிழ்வித்தியாலத்தில் 08 பாடசாலைகளைச் சேர்ந்த 282 மாணவர்களும் வித்தியானந்தா கல்லூரியில் 05 பாடசாலைகளைச் சேர்ந்த 270 மாணவர்களுமாகமொத்தம் 552மாணவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்கு இரண்டு நிலையங்களில் நடைபெற்றது. இதில் கலைமகள் வித்தியாலயத்தில் 12 பாடசாலைகளைச் சேர்ந்த 255 மாணவர்களும் கள்ளிப்பாடு அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலைகளில் 13 பாடசாலைகளைச் சேர்ந்த 360 மாணவர்களுமாக மொத்தம் 25 பாடசாலைகளைச் சேர்ந்த 665 மாணவர்கள் கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர்.

### வவுனியா மாவட்டக் கருத்தரங்குப் பணிகள்

வவுனியா வடக்குக் கல்விவலயப் பணிப்பாளர் தங்களது பிரதேச மாணவர்களும் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் எனவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகள் எனவும்,தமது பிள்ளைகளுக்கும் இவ் வாய்ப்பை வழங்கி அவர்கள் கல்வியில் உயர உதவும்படி கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கையின் படி 03.05.2023 – 04.05.2023 ஆகிய இரு தினங்களிலும் ஆறு இடங்களில் இக்கருத்தரங்கை வளவாளர்களைக் கொண்டு சிறப்புடன் நடாத்தினோம்.

இதில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் 5 பாடசாலைகளைச் சேர்ந்த 126 மாணவர்கள் கலந்து கொண்டனர். புளியங்குளம் இந்துக் கல்லூரியில் 4 பாடசாலைகளைச் சேர்ந்த 56 மாணவர்கள் கலந்து கொண்டனர்.ஒமந்தை மகாவித்தியாலயத்தில் 6 பாடசாலைகளைச் சேர்ந்த 85 மாணவர்கள் கலந்து கொண்டனர். புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் 4 பாடசாலைகளைச் சேர்ந்த 121 மாணவர்கள் கலந்து கொண்டனர்.தரணிக்குளம் கணேசா வித்தியாலயத்தில் 6 பாடசாலைகளைச் சேர்ந்த 93 மாணவர்கள் கலந்து கொண்டனர்.இங்கு மொத்தமாக 27 பாடசாலைகளைச் சேர்ந்த 513 மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

### கருத்தரங்குத் தொடர்பான அனுபவப் பகிர்வு

இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளின் சேவை புனிதமானது. மகத்தானது. இவர்கள், கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பிரதேசங்களின் பாடசாலைகளைச் சேர்ந்த சிறந்த ஆளுமையும், வாண்மையுமுள்ள ஆசிரியர்கள்.

இவர்கள் இன்றி, இக்கருத்தரங்குகள் சிறப்பாக நடந்திருக்குமோ என்பது கேள்விக்குறியே. இவ் ஆசிரியர்கள் அனைவரும் தம்முடைய சிறந்த கற்பிக்கும் ஆற்றலால் மாணவர்கள் அனைவரையும் கற்றலுக்கு உரியவர்களாக உள்ளாக்கித்தம் கற்பித்தல் பணியில் ஈடுபட்டனர். அதுமட்டுமன்றி ஆசிரியர் - மாணவர், மாணவர் - ஆசிரியர் என்ற உறவின் அடிப்படையில் தொடர்பாடி மாணவர்களிடமிருந்து பாடம் சம்பந்தமான சந்தேகங்களைப் பெற்று,அவர்களுக்குப் போதிய விளக்கம் வழங்கிப் புதிய கற்பித்தல் சாதனங்கள், உத்திகள் மூலம் தமது பணியில் திறம்பட ஈடுபட்டனர்.மாணவர்கள் சிறப்பான முறையில் கற்றது மட்டுமல்லாது மகிழ்ச்சிகரமான சூழலில் கற்றலில் ஆர்வம் உடையவர்களாகக் காணப்பட்டனர்.

எமது வளவாளர்கள் வகுப்புக்கு உரிய நேரம் முடிந்தாலும் பிள்ளைகள் மேலும் கற்பிக்கும் படி வேண்டிய நேரங்களில் அவர்களின் அன்புத் தொல்லையை ஏற்றுக் கற்பித்தனர். அவர்களின் பணி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை தொடர்ந்தது. சிலசந்தர்ப்பங்களில் நெடுந்தொலைவு மாணவர்கள் பஸ் வண்டியில் வருவதால் நேரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

சில இடங்களிலிருந்து மாணவர்கள் பிரயாண வசதியின்றி நடந்து வர வேண்டியிருந்தது. மேலும் காட்டுப்பாதை யானைகள் நடமாட்டம் உள்ள பாதையாக இருந்தாலும் சிரமப்பட்டு இவற்றுக்குமுகங்கொடுத்துக்கல்வி கற்க வேண்டும் என்ற துடிப்பில் மாணவர்கள் வந்து கற்றது உண்மையில் அவர்களுக்குக் கல்வியின் மேல் இருந்த ஆர்வத்தை வெளிக்காட்டியிருந்தது.

ஆசிரியர்கள் இத்தகைய மாணவர்களுக்கு,கல்வி போய்ச் சேர வேண்டும் என்ற ஆர்வத்துடன் மகிழ்ச்சிகரமாகக் கருத்தரங்கினை நடாத்தினார்கள். பல்வேறு வசதி குறைவான இத்தகையை பிள்ளைகளுக்குச் சேவைசெய்யும் பொறுப்பைத் தங்களுக்கு வழங்கிய வலயக்கல்விப்பணிப்பாளர்,பிரதிக் கல்விப் பணிப்பாளர்,உதவிக் கல்விப் பணிப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகியோருக்குத்தமது நன்றியைத்தெரிவித்தனர்.

இவர்களின் கற்பித்தலைக் கண்ணுற்ற குறிப்பிட்ட பாடசாலை ஆசிரியர்கள், கருத்தரங்கு முடிந்தபின்னரும் தொடர்ந்து தமது பாடசாலைகளுக்கு இவ் ஆசிரியர்களை அழைத்து மாணவர்களுக்கு மேலும் கற்பித்துப்பிள்ளைகளின் சந்தேகங்களைத்தெளிவுபடுத்த இவர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இதன்மூலம் இந்த ஆசிரியர்கள் எத்தகைய சிறந்த ஆசிரியர்கள் என அறிந்து கொள்ளலாம்.

மூன்று கல்வி வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களும் அவர்களுடன் இணைந்து பணிப்பாளர் களும், ஆசிரிய ஆலோசகர்களும் தமது பகுதியில் இக் கருத்தரங்கு நடாத்த வேண்டுமென்ற முனைப்புடன் செயற்பட்டு ஆர்வத்துடன் உதவினார்கள்.அதிபர்களுடன் தொடர்பு கொண்டு செயற்பாட்டுக்கான சகல ஒழுங்குகளையும் செய்து தந்தனர். அத்துடன், தமது பகுதி பாடசாலை இணைத்துக் குறிப்பிட்ட பாடசாலைகளில் கருத்தரங்கு நடைபெற உதவினார்கள். தூர இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தமான கருத்தரங்கு நடைபெறவேண்டிய சிறந்த இடங்களை ஏற்படுத்தித் தந்தனர்.

தமது கருத்தரங்கு நிலையங்களுக்கு ஆசிரிய ஆலோசகர்களை நியமித்து,கருத்தரங்கு எவ்வித தடையுமின்றி நடைபெற உதவினார்கள்.அத்துடன், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அவருடன் இணைந்த ஏனைய பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கருத்தரங்கு நிலையங்களுக்கு நேரடியாக வருகைதந்து ஊக்கப்படுத்தினார்கள். இது அவர்கள் தமது பிரதேசக்கல்விவிருத்திக்குக் காட்டும் அக்கறையையும், ஆர்வத்தையும் எடுத்துக் காட்டியது. பாடசாலை அதிபர்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுடன் வருகைதந்து வேண்டிய உதவிகளைச் செய்தது பாராட்டுத்தலுக்குரியது.

கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எட்டுப் பாடசாலைகளில் ஆரம்பித்த பரீட்சார்த்தக் கருத்தரங்குகள், பின்தங்கிய பாடசாலைகளில் விரிவடைந்து அவர்களுக்குச் சேவை செய்யக் கிடைத்தமையை நாம் பெரும் பேறாகக் கருதுகின்றோம்.

குறிப்பிட்ட, பாடத்துக்குரிய ஆசிரியர் இன்மை, ஆசிரியர் பற்றாக்குறை. வளப்பற்றாக்குறை, தொடர்பாடல் வசதியீனம், பிரயாணப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணங்களால் நலிவுற்றிருக்கும் இப்பாடசாலைகளை வளர்த்தெடுக்க வேண்டியது நம்பாரிய பொறுப்பாகும்.

உதாரணமாக வவுனியா வடக்கு கல்விவலயத்திலுள்ள ஏறக்குறைய 27 பாடசாலைகளுக்குச் சைவநெறி கற்பிப்பதற்கு 3 ஆசிரியர்கள் காணப்படுவது பாரிய குறைபாடாகும். சமய பாட அறிவில்லாத ஏனைய ஆசிரியர்கள் மூலம் கற்பிப்பது பொருத்தப்பாடு உடையதா என்பது கேள்விக்குறியாகும்.

அதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக வவுனியா வடக்குக்கல்வி வலயத்தில் 20 பாடசாலைகளுக்கு மேல் மூடப்பட்டிருப்பதும் வேதனைக்குரியது. இச் சூழலிலுள்ள வசதியான பிள்ளைகள் நகர்களை நோக்கி நகர மற்றைய பிள்ளைகள் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை அல்லது கல்வியைத்தொடர முடியாத நிலைக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள இந்த இடங்களுக்குஓரளவாவது அகில இலங்கை இந்து மாமன்றமும்,இந்து வித்தியா விருத்திச் சங்கமும் இணைந்து கருத்தரங்கு நடாத்திப் பிள்ளைகளின் கல்விக்காக உதவக் கிடைத்தமையையிட்டு மகிழ்வடைகின்றோம். இத்தகைய பணிக்கு எல்லோருடைய பேராதரவும் தொடர்ந்து தேவை என்பதைக் குறிப்பிட்டுக் கொள்கின்றோம். அத்துடன்,இத்தகைய இடங்களுக்கு மேலும் உதவிபுரிய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

நகர்ப்புறப் பாடசாலைகள் சகல வளங்களும் பெற்றுவளர்ச்சி கண்டு கொண்டிருக்கும் போது கிராமப்புறப் பாடசாலைகள் எந்த வித வசதியும் அற்றுக் காணப்படுகின்றன. கடந்த இரண்டு வருடங்களாகப் பாடசாலை வகுப்பறைக் கல்விபாதிக்கப்பட்ட போது நிகழ்நிலைக் கல்வி தோற்றம்பெற்றது. இந்த நிகழ்நிலைக் கல்வியால் பயன் அடைந்தவர்கள் கூட நகர்ப்புறப் பணம் படைத்த, தொலைத் தொடர்பு வசதியுடைய பிள்ளைகளே.

இத்தகைய, வசதிகள் எதுவும் அற்ற பிள்ளைகளின் நிலை கவலைக்குரியது. பல கிராமப்புறங்களில் நிகழ்நிலைக் கல்வி கற்பிப்பதற்கான இணைய வீச்சு எல்லைக்குறைபாட்டினால் பிள்ளைகள் மரங்களுக்குமேல் ஏறியும் வீட்டுக் கூரைக்கு மேல் ஏறியும், கற்க எவ்வளவோ முயற்சித்தார்கள், துன்பத்திற்கு உள்ளானார்கள் என்பதனை நாம் அறிவோம்.

அதுமட்டுமல்லாது, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெற்றோர்களிடம் எதுவித தொடர்பாடல் வசதிகளோ அல்லது நிகழ்நிலைக் கற்றலுக்குப் பயன்படுத்தக் கூடிய தொலைபேசிவசதிகளோ உரியவாறு இல்லை. இதனால் நிகழ்நிலைக் கல்வியால் அனைத்து மாணவர்களும் உரிய சமவாய்ப்பைப்பெற்றுக் கொள்ள முடியவில்லை.

பல்வேறு பிரச்சினைகள், அனர்த்தங்களால் பாடசாலைகள் மூடப்பட்ட பிரதேசப் பிள்ளைகள் நாளாந்த வாழ்வுக்கே சிரமப்படுகின்றனர். இத்தகையை சூழலில் உள்ள பிள்ளைகளுக்கு “எல்லோருக்கும் கல்வி”என்ற சித்தாந்தம் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது.

பின்தங்கிய அனைத்து இடங்களுக்கும் எம்மால் இத்தகைய உதவிகள் செய்ய முடியா விட்டாலும் கூட தற்போது பரீட்சார்த்தமாக அகில இலங்கை இந்து மாமன்றத்தாலும், இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தாலும் நடாத்தப்படும் சமயம்,மற்றும் கல்வி தொடர்பான செயற்பாடுகளுக்கு

உங்கள்எல்லோருடைய பேராதரவும் தொடர்ந்து தேவை எனக்கேட்டுக்கொள்வதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்து வித்தியா விருத்திச்சங்கமும்,அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நடாத்திய 11 ஆம் ஆண்டு மற்றும் தரம் 5 புலமைப்பரில் பரீட்சை மாணவர்களின் பாட அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான செயல் திட்டம்-2023 இல் அர்ப்பணிப்புடன் பங்காற்றிய ஆசிரிய வளவாளர்கள்**

| தலைவர்: திரு. த. முத்துக்குமாரசாமி | | |
|---|---|---|
| இணைப்பாளர்: திரு தி.அறிவழகன் | | |
| வளவாளர்பெயர் | பாடம் | பாடசாலை |
| திரு.வா.கணேஸ்வரன் | தமிழ் | உப பீடாதிபதி. தர்ஹாநகர் தேசிய கல்வியியற் கல்லூரி |
| திரு.தி.திவாகரன் | தமிழ் | கொ/தெஹிவளை தமிழ் வித்தியாலயம். |
| திரு.ப.மதுரதன் | தமிழ் | கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.த.வரதராஜன் | தமிழ் | வவு/விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா |
| திரு.பொ.சிவகுமார் | கணிதம் | கொ/அல்-ஹுசைனியா கல்லூரி -கொழும்பு-11 |
| திரு.சோ.கிருஸ்ணதாஸ் | கணிதம் | கொ/இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி, கொழும்பு-04 |
| திரு.இ.மேனன் | கணிதம் | கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.க.ரஜீவ்காந்த் | கணிதம் | கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.ச.ஹோபிநாத் | சைவநெறி | திரி/திரியாய் தமிழ் வித்தியாலயம். |
| திரு.ச.கருணாகரன் | சைவநெறி | ஹொ/மிலகந்த தமிழ் வித்தியாலயம் |
| திரு.அ.வாசுதேவன் | சைவநெறி | கொ.சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு -06 |
| திரு.சு.பிரகலாதன் | விஞ்ஞானம் | யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி |
| திரு.சி.இரவிச்சந்திரன். | விஞ்ஞானம் | யா/எழுவைதீவு முருகவேள் மகாவித்தியாலம் |
| திரு.ப.சிவசுதன் | விஞ்ஞானம் | கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.வேணிலான் | விஞ்ஞானம் | (ஓய்வு நிலை) கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.சு.வளர்மதி | சைவநெறி | கொ/சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு-06 |
| திரு.த.அகிலன் | வரலாறு | கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.ஆ.சந்திரபவன் | தரம் -5 | கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.பா.சுதந்திரன் | தரம் -5 | கொ/றோயல்கல்லூரி,கொழும்பு |
| திரு.து.வித்தகன் | தரம் -5 | கொ/இந்துக்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.பொ.கஜேந்திரகுமார் | தரம் -5 | கொ/இராமநாதன் இந்துமகளிர்கல்லூரி,கொழும்பு-04 |
| திரு.பெ.ஜோன்சன் | ஆங்கிலம் | ஆசிரியஆலோசகர்,கொழும்பு |
| திரு.S.மேகலநாதன் | ஆங்கிலம் | கொ/சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு -06 |

## கருத்தரங்கில் பங்குபற்றிய அம்பாறை, துனுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு வலயப்பாடசாலைகள்:

| துனுக்காய் வலயப் பாடசாலைகள் | |
|---|---|
| 1. மு/ஒட்டுசுட்டான் ம.வி | 13. மு/தெணியன்குளம்.அ.த.க.பா |
| 2. மு/முத்தையன் கட்டு.இடதுகரை அ.த.க.பா | 14. மு/பாண்டியன்குளம்.ம.வி |
| 3. மு/தாண்டவன்.அ.த.ப.பா | 15. மு/பாலிநகர்.ம.வி |
| 4 மு/பண்டாரவன்னியன்.ம.வி | 16. மு/நட்டாங்கண்டல்.அ.த.க.பா |
| 5. மு /முத்தையன்கட்டு வலதுகரை ம.வி | 17. மு/விநாயகபுரம். அ.த.க.பா |
| 6. மு/கூளாமுறிப்பு .அ.த.க.பா | 18. மு/மாங்குளம்.மு.வி |
| 7. மு/கல்விளாங்குளம் அ.த.க.பா | 19. மு/கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பா |
| 8. மு/துனுக்காய் அ.த.க.பா | 20. மு/பெரிய புளியங்குளம்.அ.த.க.பா |
| 9. மு/கோட்டை கட்டிய குளம் அ.த.க.பா. | 21. ம/ஒலுமடு.த.வி |
| 10. மு/மல்லாவி.C.C.த.க.பா | 22. மு/வன்னிவிளாங்குளம்.அ.த.க.பா |
| 11. மு/ யோகபுரம் ம.வி | 23. மு/திருமுறிகண்டி இ.வி |
| 12. மு/ தெரன்கண்டல் .அ.த.ப.பா | 24. மு/ஐயன்கண்குளம் .அ.த.க.பா |

| முல்லைத்தீவு வலயப் பாடசாலைகள் | |
|---|---|
| 1. மு/பாரதி.ம.வி | 13. மு/வித்தியானந்தக் கல்லூரி |
| 2. மு/ தேராவில் ம.வி | 14. மு/தண்ணீருற்று மு.ம.வி |
| 3. மு/உடையார்கட்டு ம.வி | 15. மு/முல்லைத்தீவு றோ.க.ம.பா |
| 4. மு/குரவில் த.வி | 16. மு/சிலாவத்தை த.வி |
| 5. மு/விஸ்வமடு ம.வி | 17. மு/அலம்பில் றோ.க.வி |
| 6. மு/வள்ளிபுனம் ம.வி | 18. மு/செம்மலை ம.வி |
| 7 மு/சுதந்திரபுரம் த.வி | 19. மு/உடுப்புக்குளம் க.வி |
| 8. மு/ தேவிபுரம் இ.த.க.பா | 20. மு/முல்லைத்தீவு ம.வி |
| 9. மு /கைவேலி கணேசா வித்தியாலயம் | 21 மு/கொக்கிளாய் அ.த.க.பா |
| 10 மு/வற்றாப்பளை ம.வி | 22. மு/கொக்குத்தொடுவாய் ம.வி |
| 11. மு/தண்ணீருற்று இ.த.க.பா | |
| 12. மு/கலைமகள் வித்தியாலயம் | |

| வவுனியா வடக்குப் வலயப் பாடசாலைகள் | |
|---|---|
| 1. வ /நெடுங்கேணி ம.வி | 15. வ / கருங்காலிக்குளம் அ.த.க.பா |
| 2. வ /ஒலுமடு த.ம.வி | 16. வ / மாதர் பனிக்கர் மகிழங்குளம் க. உ.வி |
| 3. வ /மாறாஇலுப்பை அ.த.க.பா | 17. வ / கோவில் குஞ்சுக்குளம் அ.த.க.பா |
| 4. வ / குளவி சுட்டான் அ.த.க.பா | 18 வ / புதுக்குளம் ம.வி |
| 5. வ / பட்டிக் குடியிருப்பு அ.த.க.பா | 19. வ / சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியயலயம் |
| 6. வ / புளியங்குளம் இ . க | 20. வ / சுந்தரபுரம் அ.த.க.பா |
| 7. வ / மதியாமடு விவேகானந்தா .வி | 21. வ / தவசியாகுளம் அ.த.க.பா |
| 8. வ / விக்னேஸ்வரா ம.வி | 22. வ / தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம் |
| 9. வ / பன்றிக்கெய்தகுளம் அ.த.க.பா | 23. வ / கோவில் புளியங்குளம் ம.த.வி |
| 10 வ. / கனகராயன் குளம் ம.வி | 24. வ. / பூம்புகார் கண்ணகி வித்தியாலம் |
| 11. வ / சின்னடம்பன் பாரதி .ம.வி | 25. வ / மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயம் |
| 12. வ / ஓமந்தை ம.க | 26. வ / கல்மடு ம.வி |
| 13. வ / சேமமடு சண்முகானந்தா ம.வி | 27. வ / கிடாயச்சூரி அ.த.க.பா |
| 14. வ / நொச்சிக்குளம் இல.1 அ.த.க.பா | |

| அம்பாறை – திருக்கோவில் வலயப் பாடசாலைகள் | |
|---|---|
| 1. திருக்.கோ / சக்தி வி. விநாயகபுரம் | 5.. திருக்.கோ / பசுபதேஸ்வரர் வி. பனங்காடு |
| 2.திருக்.கோ/திருக்கோவில் மெதடிஸ்த்த.மிசன் த.ம.வி | 6. திருக்.கோ / திருநாவுக்கரசு.வி. ஆலையடி வேம்பு |
| 3. திருக்.கோ / தம்பிலுவில் ம.வி | 7. திருக்.கோ / விநாயகர் ம.வி. அக்கரைப்பற்று |
| 4. திருக்.கோ / சரஸ்வதி வி. தம்பிலுவில் | 8. களு / கலைமகள் வித்தியாலயம், மத்துகம |
| | |


## நன்றிக்குரியவர்கள்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள்,

வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு. அ. உமா மகேஸ்வரன் அவர்கள்,

துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் அவர்களும், சக உத்தியோகத்தர்களும்.

முல்லைத்தீவு கல்வி வலயப் பணிப்பாளர் திரு. இ. தமிழ் மாறன் அவர்களும், அவரது சக உத்தியோகதர்களும்.

வவுனியா வடக்கு கல்வி வலயப் பணிப்பாளர் திரு.லெனின் அறிவழகன் அவர்களும், அவரது சக உத்தியோகத்தர்களும்,

திருக்கோவில்வலயக் கல்வி பணிப்பாளர் திரு.உதயகுமார் அவர்களும், அவரது சகஉத்தியோகத்தர்களும்,

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் திரு.க.மணிமார்பன் அவர்களும், அவரது உத்தியோகத்தர்களும்,

கருத்தரங்கு நடைபெற்ற காலங்களில் உதவி செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள்

இந்து வித்தியா விருத்திச் சங்க உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,

அகில இலங்கை இந்து மாமன்ற உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்.

வேறு வகையில் உதவி புரிந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.


திரு.வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை
இந்து மாமன்றம்.

திரு.த.முத்துக்குமாரசாமி
தலைவர்,
இந்து வித்தியா விருத்திச் சங்கம்,
துணைத்தலைவர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்

# சோழர் காலத்தில் சைவ சமயம்

## (கி.பி. 900 - 1300)

Dr.மா.இராசமாணிக்கனார்



### வட இந்தியாவில் சைவ சமயம்

சோழர்கள் பேரரசை ஏற்படுத்தி ஆண்ட நானூறு ஆண்டு காலம் (கி. பி. 900-1300) இந்தியா முழுவதும் சைவசமயம் நன்கு வளர்ந்த காலமாகும். காஷ்மீர் நாட்டில் பல சிவன் கோவில்கள் சிறப்புற்றிருந்தன. கோவில்களை அடுத்து மடங்களும் தோன்றி வளர்ந்தன.

நேபாள நாடு அசோகருக்கு முன்பிருந்தே பெரிய சைவமடத்தைப் பெற்ற நாடாக இருந்தது. அங்குள்ள பசுபதி கோவிலும், அதனைச் சார்ந்த சைவமடமும் சிவாசாரியார் பலரைத் தோற்றுவித்தன.

கூர்ச்சரம், கத்தியவார் நாடுகளிலும் சிவன் கோவில்கள் சிறப்புற்றிருந்தன. அப்பகுதியையாண்ட சாளுக்கிய மன்னர்கள் லகுலீச பரசுபத ஆசார்யர்களைத் தாங்கள் கட்டிய மடங்களின் தலைவர்களாக வைத்தனர். அவர்களிடம் தீட்சை பெற்றுத் தங்களைப் "பரம மாகேசுவரர்'' என்று கூறிக்கொண்டனர் தங்கள் கல்வெட்டுத் தொடக்கத்தில் "ஓம் நமசிவாய" என்று எழுதினர். இவர்தம் ஆட்சியில் லகுலீசர் தோன்றிய காரோணநகர் சிறப்புற்றது. *லகுலீச பாசுபதரும் சிறப்புற்றனர்.

[*லகுலீசபாசுபதர்களின் தொடர்புடைய கோவில்கள் நாகைக் காரோணம், குடந்தைக் காரோணம், கச்சிக்காரோணம் என்பன]

மாளவம், இராசபுதனம் இவற்றை ஆண்ட மன்னர் பெரும்பாலும் சைவரே. உச்சையினிலிருக்கும் மகாகாளர் கோவில் மிகச் சிறப்புற்றது. கௌட தேசத்துச் சிவாசாரியர் அரசர் குருமாராக இருந்தனர்.

பண்டில்கண்டு பகுதியை ஆண்ட சந்திராத்திரையர் என்ற மரபினர் சிறந்த சிவபக்தர்கள். இவர்களும் தீட்சை பெற்றுத் தங்களைப் "பரம மாகேசுவரர்'' என்று கூறிக்கொண்டனர். இவர்கள் கல்வெட்டுக்களும் "ஓம் நமசிவாய'' என்பதையே தொடக்கமாகக் கொண்டவை.

இராசபுதனம், பஞ்சாப் இவற்றை ஆண்ட சாகமான மன்னர்களும் சிவபக்தர்களே. இவர்தம் நாட்டில் புராணமகாதேவர் கோவில், சித்தீச்சரம், கபாலீசுவரர் கோவில் என்பன சிறப்புற்றவை. கோவில்களை அடுத்திருந்த மடங்களில் லகுலீச பாசுபதத் துறவிகள் இருந்தனர்.

ஐக்கிய மாகாணங்களிலும் நடு மாகாணத்திலும் ஆண்ட ஹெய்ஹயர் வட இந்தியாவில் பல இடங்களை ஆண்டனர். இவருள் ஒரு பிரிவினர் கங்கைக்கும் நருமதைக்கும் இடைப்பட்ட ஒன்பது லட்சம் சிற்றூர்களைக் கொண்ட தாகள நாட்டை ஆண்டனர். அவர்தம் தலைநகர் திரிபுரி என்பதாகும். அவர்கள் சிவநெறியில் சிறந்து விளங்கினர். சிவாசாரியர்கட்கு மடம் கட்டித்தந்து, அவர்களையே தங்கள் குருமாராகக் கொண்டனர்.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் ஹெய்ஹய அரசனாக இருந்த முதலாம் யுவமகாராசன் சோணையாற்றங்கரையில் ஒரு கோவிலையும் மடத்தையும் கட்டி, சத்பாவசம்பு என்பவரிடம் ஒப்படைத்தான் அவருக்கு மூன்று லட்சம் சிற்றூர்களையும் சமய வளர்ச்சிக்காக வழங்கினான். அச்சிவாசாரியரே கோளகீ மடத்தை ஏற்படுத்தியவர். அவர் மரபில் வந்த சிவாசாரியர் விசுவேசுவர சம்பு என்பவர் ஹெய்ஹய அரசர்களுக்கும் தீட்சாகுருவாக விளங்கினார்.



விந்திய மலைக்குத் தென்பாலிருந்த இராஷ்டிரகூடர்கள் எல்லோராக் குகைகளில் கயிலாசநாதர் கோவில் போன்ற கோவில்களை அமைத்துச் சைவ வளர்ச்சிக்கு உதவி புரிந்தனர். இராஷ்டிரகூடர்க்குப் பின் வந்த சாளுக்கியர் காலத்திலும் பம்பாய் மாகாணத்தில் சைவம் ஓரளவு வளர்ச்சியுற்றது.

இவ்விவரங்களால், சோழப் பேரரசு ஏற்பட்ட காலத்திலும் அதன் பின்னரும் சிறப்பாக வட இந்தியாவில் சைவ சமயம் நல்ல வளர்ச்சி பெற்றது என்பதை உணரலாம். இச்சூழ்நிலையே சோழநாட்டில் சைவம் நன்கு வளரக் காரணமாயிருந்தது.

## சோழர் சமய நிலை

சேர-சோழ-பாண்டியருள் சைவத்துள் மிகவும் அழுத்தமான பற்றுடையவரும் நூற்றுக்கணக்கான சிவன் கோவில்களைக் கட்டியவரும் சோழரேயாவர். அழுத்தமான சைவப் பற்றுடைய சோழர்கள் பல்லவரை முறியடித்துச் சோழப் பேரரசை ஏற்படுத்திய பிறகும் சைவத்தை வளர்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தனர் என்பதில் வியப்பில்லை.

சோழவேந்தர் துங்கபத்திரை ஆறு முதல் கன்னிமுனை வரையிலும் உள்ள தென்இந்தியாவை ஆண்டவர். சோழப்பேரரசு ஏற்படுத்திய ஆதித்தன் காலத்தில் தமிழகத்தில் பாடல்பெற்ற கோவில்கள் ஏறத்தாழ ஐந்நூறு இருந்தன. பாடல்பெறாத கோவில்களும் இருந்தன. இவ்விருவகைக் கோவில்களும் சோழர் காலத்தில் புதுப்பிக்கப்பெற்றன. ஆதித்தன் முதலிய சோழ மன்னர் தத்தம் ஆட்சிக் காலத்தில் புதியனவாக எடுப்பித்த கோவில்கள் பலவாகும். சோழர் ஆட்சிக்கு அடங்கிய சிற்றரசர்கள் புதியனவாகக் கட்டிய கோவில்கள் பல. அரசாங்க அலுவலர் செய்த திருப்பணிகள் பல. சோழமாதேவியாரும், சிற்றரசர் மனைவியரும், அரசாங்க அலுவலர் மனைவியரும் செய்த திருப்பணிகள் பலவாகும். துறவிகள் முதல் சாதாரண குடிமகன் ஈறாக இருந்த மக்கள் செய்த திருப்பணிகள் எண்ணில.

## ஆதித்த சோழன் முதலியோர்

ஆதித்த சோழன் (கி. பி. 871-907) செய்த திருப்பணிகளுள் சிறந்தது, காவிரியின் இருகரைகளிலும் இருந்த பாடல்பெற்ற கோவில்களைப் புதுப்பித்தமையாகும். பாடல்பெற்ற கோவில்கள் அழியத்தக்க மண், மரம் முதலியவற்றால் ஆனவை, சோழன், அவை அழியாமலிருக்க வேண்டி, அவற்றைக் கற்றளிகளாக்கினான். இங்ஙனம் ஆதித்தனால் தொடங்கப்பட்ட இத்திருப்பணி, சோழ அரசர்களாலும் அவர்தம் மாதேவியராலும் பிறராலும் அவர்களது ஆட்சியின் போது நடைபெற்று வந்தது என்பதை எண்ணிறந்த கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. சமயவளர்ச்சிக்குத் தாயகக் கோவில்கள். அவை என்றும் அழியாமல் இருந்தாற்றான் சமயம் வளர முடியும். ஆதலாற்றான் ஆதித்த சோழன் கோவில்களைக் கற்றளிகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டான். கோவில் கருவறையும் விமானமும் கற்றளியாக மாற்றப்பட்டன. இவ்வாறு ஆதித்தன் கற்றளியாக்கியதே திருப்புறம்பியத்தில் உள்ள சாட்சிநாதர் கோவில். அஃது அவன் கால முதல் ஆதித்தேச்சரம் எனப் பெயர் பெற்றது.

ஆதித்தன் மகனான முதற்பராந்தகன் (கி. பி. 907-953) சிறந்த சிவபக்தன்; புலவர்; புரவலன். இவன் செய்த திருப்பணிகளுள் மிக்க சிறப்புடையது தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தது. பராந்தகன் மூத்த மகனான இராசாதித்தன் திருநாவலூர்க்கோவிலுள் ஒரு புதிய கோவிலைக் கட்டினான். இராசாதித்தன் தம்பியான கண்டராதித்தர் (கி. பி. 947-957) திருவிசைப்பா ஆசிரியருள் ஒருவர். அவர் திருப்பழனத்துக்குப் பக்கத்தில் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை உண்டாக்கினார். அங்கு சிவன் கோவிலைக் கட்டினார்.

## செம்பியன் மாதேவியார்

இவர் கண்டராதித்தர் மனைவியார். இவர் செய்துள்ள திருப்பணிகள் இந்திய வரலாற்றில் வேறு எந்த அரசியும் செய்யாத அளவினவாகும். இவர் பாடல்பெற்ற கோவில்களான திருத்துருத்தி, திருக்கோடிகா, திருவக்கரை, திருமுதுகுன்றம், தென்குரங்காடுதுறை முதலிய கோவில்களைக் கற்றளியாக்கினார். ஐயாறு, தலைச்சங்காடு, ஆரூர், திருப்புறம்பியம், திருவெண்காடு முதலிய பல கோவில்களுக்கு நிலதானமும் பொன் வெள்ளிப் பாத்திரங்களும் நகைகளும் பிறவும் உதவியுள்ளார்.

## முதலாம் இராசராசன் (கி.பி.985-1014)

தன் காலம் வரையிலும் தமிழகத்தில் ஏற்பட்டிராத பெரிய அளவில் மிக அற்புத வேலைப்பாடுகள் கொண்ட கோவிலை அமைத்தவன் முதலாம் இராச ராசனே ஆவன். அவன் ஆறுஆண்டுகள் அரும் பாடுபட்டுத் தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான். அதில் கடவுளர் திருமேனிகளையும், நாயன்மார் படிமங்களையும் எழுந்தருளச் செய்தான். ஒவ்வொன்றுக்கும் விலையுயர்ந்த நகைகளை அளித்தான். பூசைக்காகவும், விழாவுக்காகவும்

பல சிற்றூர்களை மானியமாக விட்டான். அவனைப் பின்பற்றி அரச குடும்பத்தினரும் அரசாங்க அலுவலரும் மிகப் பல அறப்பணிகள் செய்தனர். தமிழ் நாட்டுப் பல கோவில்களிலிருந்து தஞ்சைப் பெரிய கோவிலில் இசை நடனக் கலைகளை வளர்க்கப் பதியிலார் நானூற்றுவர் குடியேற்றப்பட்டனர். ஒவ்வொருத்திக்கும் ஒரு வீடும், ஒரு வேலி நிலமும் தரப்பட்டன. திருப்பதிகம் ஓத நாற்பத்தெண்மர் அமர்த்தப்பட்டனர். இவ்வாறே கோவில் பணிகளை நன்கு கவனித்துச் செய்யப் பல கோவில்களில் இருந்து பலர் நியமனம் பெற்றனர். இந்த விவரங்கள் அனைத்தும் தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள கல்வெட்டுக்களால் நன்கு அறியலாம்.

இராசராசன் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு தில்லையில் அடக்கம் செய்யப் பட்டிருந்த முதல் ஏழு திருமுறைகளைத் தொகுப்பித்தான். இவன் ‘சிவபாத சேகரன்’ என்று பாராட்டப்பட்டவன். இவன் காலமுதல் திருமுறைகள் நாடெங்கும் பரவலாயின. இவனைப் பின் பற்றிய அரசரும் பிறரும் கோவில் திருப்பணிகளில் ஈடுபடலாயினர்.

## முதலாம் இராசேந்திரன் (கி. பி. 1012-1044)

இராசராசனின் மகனான முதலாம் இராசேந்திரன் உடையார்பாளையம் தாலுகாவில் பெரிய நகரம் ஒன்றை நிறுவினான். அதன் பெயர் கங்கைகொண்ட சோழபுரம் என்பது. அந்நகரத்தில் தஞ்சைப் பெரிய கோவிலைப் போலப் பெரிய சிவன் கோவில் கட்டப்பட்டது. அதுவே கங்கைகொண்ட சோழேச்சரம் என்பது. அஃது அமைப்பிலும் வேலைப்பாட்டிலும் தஞ்சைப் பெரிய கோவிலை ஒத்திருந்தது. அப்பெருங்கோவில் இராசேந்திரன் கால முதல் சோழராட்சி வீழ்ச்சியுறும் வரையில் மிகச் சிறந்த நிலையில் இருந்தது.

## முதற் குலோத்துங்கன் (கி. பி. 1070-1120)

இவன் திருநீற்றுச் சோழன் எனவும் பரமமாகேசுவரன் எனவும் கல்வெட்டுக்களிற் குறிக்கப்படலால், தீட்சை பெற்ற சைவன் என்று அறியப்படுகிறான். இவன் காலம் முதல் வேங்கி நாட்டுத் திராட்சாராமம் - பீமேசுவரர் கோவில் சிறப்படையத் தொடங்கியது. இவன் தில்லையில் கூத்த பெருமான் ஊர்வலம் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்தான் என்பது தில்லையுலா என்னும் நூலிலிருந்து தெரிகின்றது. சமயக்குரவர் நால்வர் தேர்கள் முன் சென்றன. சேரமான் பெருமாள் வரகுணபாண்டியன் இவர்கள் சேவிப்பச் சிவபெருமான் உலாச் சென்றான். அனைவர்க்கும் முன்பாகக் குலோத்துங்கன் குதிரைமீது சென்றான். தில்லைச் சிற்றம்பலத்தில் “நமசிவாய“ என்னும் ஐந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட பொன்னோடுகள் வேயப்பட்டிருந்தன.

## விக்கிரம சோழன் (கி. பி. 1120-1135)

இவன் குலோத்துங்கனுக்கு மகன். இவ்வரசன் தன் சிற்றரசர் கொடுத்த திரைப் பொருளின் பெரும்பகுதியைத் தில்லைக்கோவிலைப் புதுப்பிக்கவும் விரிவாக்கவும் செலவிட்டான். பொன்னம்பலம் சூழ்ந்த திருமாளிகை, கோபுரவாசல், கூடசாலைகள், பலிபீடம், தேர் இவற்றைப் பொன்னால் வேய்ந்தான். தன் பெயரால் திருவிக்கிரமன் திருவீதியும் மாளிகையும் அமைத்தான். கூத்தப்பெருமான் உலாப்போகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்தான். பல பொன் தட்டுகள் செய்து உதவினான். இவன் ஒட்டக்கூத்தன் மாணவன்; அவரால் உலாக்கொண்டவன்.

## இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133-1150)

இவன் விக்கிரம சோழனால் தொடங்கப்பெற்ற தில்லைத் திருப்பணிகளை முடித்தவன். இவ்வேந்தன் தில்லையில் எழுநிலைக் கோபுரங்களை அமைத்தான். அம்மனுக்குத் திருமாளிகை அமைத்தான். பேரம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தான். இவன் நடராசர் பாத தாமரையில் உள்ள தேனைப் பருகும் வண்டு என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இப்பெரியோன் திருவாரூர்க் கோவிலில் இருந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் படிமங்கட்குப் பூசை நடக்கத் தானம் அளித்தவன். இம்மன்னன் அநபாயன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன். இம்மன்னனும் ஒட்டக்கூத்தரது மாணவன். அவரால் உலாவும் பிள்ளைத் தமிழும் பாடப்பெற்றவன். சேக்கிழாரைக் கொண்டு பெரிய புராணம் பாடச்செய்த பெருந்தகை இவனே.

## இரண்டாம் இராசராசன் (கி. பி. 1146-1173)

இவன் கும்பகோணத்தை அடுத்த தாராசுரத்தில் (இராசராசபுரத்தில்) பெரிய சிவன் கோவிலைக் கட்டினான். அதன் பெயர் இராசராசேச்சுரம் என்பது. அக்கோவில் கட்டடக் கலைக்கும் சிற்ப வேலைப்பாட்டுக்கும் மிக்க புகழ்பெற்றது. இவ்வரசனும் ஒட்டக்கூத்தரது மாணவன். அவரால் உலாவிலும் தக்கயாகப் பாணியிலும் பாராட்டப்பட்டவன்.

## மூன்றாம் குலோத்துங்கன் (கி. பி. 1178-1218)

இப்பேரரசன் திருவிடைமருதூர்க்கருகில் திருபுவன வீரேசுவரம் என்னும் பெரிய சிவன் கோவிலைக் கட்டினவன். தில்லையில் முகமண்டபம், கோபுரம், அம்மன் திருச்சுற்று முதலியவற்றைப் பழுது பார்த்தவன். பல சிவன் கோவில்களைப் பழுது பார்த்தவன். “நம் தோழன் திருபுவன வீரதேவன்” என்று இவனைச் சிவபெருமான் குறிப்பிட்டதாகத் திருவாரூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது. இவன் காலத்திலும் பிற்பட்ட சோழர் காலத்திலும் திருமுறைகளைப் பாதுகாக்கக் குகைகளும் சமய வளர்ச்சிக்காக மடங்களும் நாட்டிற் பெருகின.

## அரச மாதேவியார்

ஆதித்த சோழன் தொடங்கிய சைவத் திருப்பணிகள் அவனுக்குப் பின் வந்த சோழவேந்தர் தொடர்ந்து வளர்த்தது போலவே, ஆதித்தன் மனைவி தொடங்கிய திருப்பணிகள் அவளுக்குப் பின் வந்த சோழமாதேவியர் தொடர்ந்து செய்யலாயினர். திருப்பூந்துரித்திக் கோவில் ஆதித்த சோழன் மனைவியாலும், திருவூரல் கோவில் முதற் பராந்தகன்

மகளாலும், செம்பியன் மாதேவியில் உள்ள கோவில் உத்தம சோழன் மனைவியர் ஐவராலும். திருவெண்காடு, திருவிசலூர், திருவையாறு இவற்றிலுள்ள கோவில்கள் முதலாம் இராசராசன் மனைவியராலும், திருவலஞ்சுழியில் உள்ள சிவன் கோவில் முதலாம் இராசராசன் மகளாலும், திரு விசலூர், உடையார்குடி இவற்றிலுள்ள கோவில்கள் முதலாம் இராசேந்திர சோழன் மனைவியராலும், சிதம்பரம் கோவில் முதற் குலோத்துங்கன் சகோதரிகளாலும், திருவிடைமருதூர்க் கோவில் விக்கிரம சோழன் மனைவியராலும், திருமழப்பாடிக் கோவில் இரண்டாம் குலோத்துங்கன் மனைவியராலும், திட்டிடைக்குடிக் கோவில் இரண்டாம் இராச ராசன் மனைவியராலும், திருவெண்ணெய் நல்லூர்க் கோவில் மூன்றாம் இராசேந்திரன் மனைவியாலும் திருப்பணிகளிலும் தான வகைகளிலும் சிறப்புற்றன.

## சிற்றரசரும் திருப்பணிகளும்

சோழப் பேரரசர்க் கடங்கிய நுளம்பாதிராசர் முதலியோர் பேரரசரைப் பின்பற்றித் தமிழகத்தில் பல கோவில்களில் பலவகைத் திருப்பணிகள் செய்துள்ளனர். நுளம்பாதிராசர், யாதவராயர், சாம்புவராயர், வாணகோவரையர், பொத்தப்பிச்சோழர், மிழலை நாட்டுத் தலைவர், வைதும்ப மகாராசர், சேதிராயர், மழவராயர், காடவராயர்,முத்தரையர், முனையதரையர் என்ற சிற்றரசர்கள் தில்லை, திருநாவலூர், திருக்காளத்தி முதலிய ஊர்க்கோவில்களில் பல திருப்பணிகள் செய்துள்ளனர்.

பல்லவ மரபைச் சேர்ந்த கோப்பெருஞ்சிங்கன் நடு நாட்டில் உள்ள சேந்தமங்கலத்தை ஆண்டு வந்தவன். இவன் வீரத்திலும் சிவபக்தியிலும் சிறந்து விளங்கினான் தில்லைக் கோவிலில் தெற்குக் கோபுரத்தைக் கட்டினான். ஆக்கூர்க் கோவிலைப் புதுப்பித்தான். திருமுதுகுன்றம் முதலிய பல கோவில்களுக்குத் தானங்கள் அளித்தான். இவனும் இவன் மனைவியும் திருவண்ணாமலைக் கோவிலுக்குத் தானங்கள் அளித்தனர். இவன் மகனான மகாராச சிம்மன் தில்லையில் கிழக்குக் கோபுரத்தைக் கட்டினான். திரிபுராந்தகம், திராட்சாராமம், காளத்தி, கஞ்சி, திருவதிகை, மதுரை என்னும் இடங்களிலுள்ள சிவன் கோவில்களுக்கு நிபந்தங்கள் விடுத்தான். கோப்பெருஞ்சிங்கனும் அவன் குடும்பத்தாரும் செய்த திருப்பணிகளைக் கொண்டே, பிற சிற்றரசரும் அவர் குடும்பத்தாரும் செய்த திருப் பணிகளை ஒருவாறு உய்த்துணரலாம்.

## காலிங்கராயன் திருப்பணிகள்

முதற் குலோத்துங்கன் தானைத்தலைவனான நரலோக வீரன் என்ற காலிங்கராயன் செய்துள்ள திருப்பணிகள் அளவிறந்தன. இவன் சித்தலிங்க மடத்தில் சிவனுக்குக் கற்றளி எடுத்தான் திரு புவனை, திருப்புகலூர்க் கோவில்களில் மண்டபங்கள் அமைத்தான். வேறு பல தானங்களையும் செய்தான். இப்பெருமகன் தில்லையில் செய்துள்ள திருப்பணிகள் பலவாகும். அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை-(1) தில்லைக்கும் கடலுக்கும் நடுவில் அகன்ற சாலையை அமைத்தமை, (2) கடற் கரையில் மாசிமகத்தின்போது கடவுள் தங்க மண்டபம் சமைத்தமை, (3)கோவிலில் நூற்றுக்கால் மண்டபம் அமைத்தமை, (4) மூவர் தேவாரத்தையும் செப்பேடுகளில் எழுதுவித்தமை, (5) தேவாரம் ஓத மண்டபம் அமைத்தமை என்பன.

இவன் திருவதிகையிலும் பல திருப்பணிகள் செய்துள்ளான். அவற்றுள் - (1) நூற்றுக்கால் மண்டபம் கட்டியமை, (2) அப்பர்க்குத் தனிக் கோவிலை அமைத்தமை, (3) அப்பரது மடத்திற்கு 48 ஆயிரம் குழி தானம் செய்தமை, (4) அதிகைக் கோவிலைச் சுற்றி அகன்ற திருச்சுவற்றை அமைத்தமை, (5) நாடக சாலை அமைத்தமை குறிப்பிடத்தக்கவை.

## முடிவுரை

இவ்வாறு பேரரசர், சிற்றரசர் அரசாங்க அலுவலர் செய்த திருப்பணிகளால் தூண்டப்பட்ட வணிகர் முதலிய குடிமக்கள் தத்தம் நிலைக்கேற்றவாறு ஒவ்வொரு கோவிலிலும் தானங்கள் செய்துள்ளனர் என்பதைப் பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சுருங்கக்கூறின், சோழர் காலத்தில் அரசன் முதல் ஆண்டி ஈறாக இருந்த அனைவரும் சமயத் தொண்டில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறுதல் பொருத்தமாகும்.

பாடல் பெற்ற கோவில்கள் எல்லாம் சோழர் காலத்தில் கற்றளிகளாக மாறின. சிறிய கோவில்கள் பெரிய கோவில்களாக மாற்றப்பட்டன. ஒவ்வொரு கோவிலிலும் நாட்பூசனையும் விழாக்களும் சிறப்புற நடைபெற நிலமும் பொருளும் வழங்கப் பட்டன. கோவில் சொத்துக்களைக் கண்காணிக்க ஆட்சிக்குழு அமைந்திருந்தது. கோவிலுக்கு அவரவர் செய்த தானபாத்திரங்கள் சிவபண்டாரத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. அதே சமயத்தில் அவை கோவில் சுவர்களிலும் வெட்டுவிக்கப்பட்டன. எல்லாக் கோவில்களின் வரவு செலவும் அரசாங்க அதிகாரிகளால் ஆண்டு தோறும் தணிக்கை செய்யப்பட்டன. கோவில்களில் பெருமக்கள், ஊரவையர் என்போர் முன்னிலையில் கோவில் நகைகளை மதிப்பிட்டுக் கணக்கிட்டனர். வருவாயற்ற கோவில்கள் வருவாயிருந்த கோவில்களின் பொருளுதவியால் கவனிக்கப்பட்டன. இத்தகைய திட்டமான கோவிலாட்சியால் பொதுமக்கள் கோவில் செல்வத்தைப் பெருக்க முனைந்தனர். அதனால் கோவில்கள் செல்வ வளத்தில் பெருகின் பக்தர்களின் அறங்கள் குறைவின்றி நடந்தன. கோவில் பணியாட்கள் தத்தம் கடமைகளைத் தவறாது செய்தனர். கோவில்களில் சமயத் தொடர்பான ஆடல், பாடல், நாடகம், திருமுறை ஓதுதல், சமய போதனை செய்தல் என்பன காலம் தவறாது நடைபெற்றன. இத்தகைய சிறப்புகளால் சோழராட்சியில் சைவசமயம் பெருஞ்சிறப்புற்று விளங்கியது என்று கூறுதல் பொருத்தமாகும்.

*பாடல் பெற்ற கோவில்கள் எல்லாம் சோழர் காலத்தில் கற்றளிகளாக மாறின.*

திருமதி. சுபித்தா சுரேஸ்குமார்,
தெஹிவளை

# சித்தர்கள்

இப்பிறவிக் கடலைக் கடப்பதில் என்னை என்றும் வழிநடத்தி, காத்தருளும் இறைவா நன்றி. குருவருளும், திருவருளும் அனைவருக்கும் கிட்டட்டும். மகான்கள் இறைவனது திருவடிகளை எவ்வளவு பக்தியுடன் பற்றியிருக்கின்றார்கள், அதனால் தம்மிடம் சக்தியை வரவழைத்துத் தரிசனம் பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள் என்பவை மட்டுமல்ல, இன்றும் அவர்கள் அரூப நிலையிலிருந்து மக்களுக்கு வழி காட்டுகின்றமை தான் அதிசயம். சித்தர்கள் என்கின்ற போது சித்தத்தை, அதாவது மனதைச் சிவன் பால் செலுத்தியவர்கள் என்று பொருள் படுகின்றது. இவர்கள் கடவுள் தம்முடன் இருக்கின்றார் என்பதை உணர்ந்தவர்கள். கடவுள் நம்பிக்கை என்பது வேறு. கடவுளை உணர்வதென்பது வேறு. மதங் களைப் பின்பற்றுபவர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். ஆனால் சித்தர்கள் மனதை அடக்கி, உடலிலுள்ள வாயுவை அடக்கி, பஞ்ச பூதங்களாலான உடலை மூச்சால் கட்டுப் படுத்திப் பிரபஞ்சத்தையே கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவர்கள். சித்தத்தை அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றவர்களாகச் சித்தர்களைப் பார்க்க முடிகின்றது. இவ்வாறு சித்தர்களாக வாழ்ந்து முத்தி பெற்று, ஜீவ சமாதி நிலையில் இருந்து ஆயிரமாயிரமாண்டு காலம் வாழ்ந்து வருகின்ற சித்தர்களை வணங்கி மக்கள் பெற்றுக் கொள்கின்ற பலன்களை அறிகின்ற போது இத்தகைய மகான்களையெல்லாம் நேரில் சந்திக்கின்ற வாய்ப்புகள் எமக்குக் கிடைத்திருக்கவில்லையே என்ற ஏக்கம் ஒரு புறம், அவர்களது ஜீவ சமாதிகளைச் சென்று தொழும் பாக்கியமேனும் கிடைக்காதா என்ற ஏக்கம் மறு புறம். இருப்பினும், அவர்கள் பற்றி எண்ணுவதற்கான சிந்தனையேனும் அளித்தமைக்காக இறைவனுக்கு எனது நன்றிகள்.

மனதின் ஆற்றலை உணராதவர்கள் மனிதர்களாக வாழ்கின்றனர். ஆனால், மனதின் ஆற்றலைக் கண்டு உணர்ந்து, அதில் சித்தி பெற்றவர்கள் சித்தர்கள். எண்ணமும் செயலும் ஒரு முகப்படுகையில் சித்தியென்பது இடம் பெறுகின்றது. சித்தியென்றால் கைகூடுவதென்று பொருள். இதற்காக 12 ஆண்டுகள் கடும் தவமிருந்து இந்த சித்திகளைச் சித்தர்கள் பெறுவதாகவும், இதில் அஷ்டமா சித்திகள் அடங்குவதாகவும் கூறப்படுகின்றது. அவையாவன, அனிமா (உடலை சிறியதாக மாற்றுதல்), மகிமா (பேருருவமெடுத்தல்), லகிமா (லேசாக, கனமாக மாறுதல்), கரிமா (பலமிக்க தாக மாறுதல்), பிராப்தி (வேண்டியதை அடைதல்), பிரகாம்யம் (விரும்பும் உருவமெடுத்தல்), ஈசத்துவம் (ஈசனுக்கு சமமாதல்), வசித்துவம் (தன்வசப்படுத்தும் ஆற்றல்) போன்றவையாகும். இந்தச் சித்திகள் மூலமே அனுமந்தன் இலங்கையில் சிறிய உருவமெடுத்து சீதையைத் தேடியமையும், கிருஷ்ணர் விஷ்வரூப தரிசனம் அளித்தமையும், சித்தர்கள் நீர் மேல், முள் மேல் படுத்தலும், ஆகாய மார்க்கமாகச் செல்லுதலும், ஓரிடத்தில் அசையாதிருத்தலும், ஔவையார், காரைக்காலம்மையார் வேண்டிய உருவம் எடுத்தமையும், கண்ணன் தன் வாய்க்குள் ஈரேழு உலகத்தைக் காட்டியமையும், திருநாவுக்கரசர் தன்னைத் தாக்க வந்த யானையைத் தடுத்து நிறுத்தியமையும் இடம் பெற்றிருந்தன. இவை தவிர, பத்து வகையான இரண்டாம் நிலை சித்திகளும் உள்ளதாக பாகவத புராணத்தில் குறிப்பிடப்படுள்ளதாகவும் குறிப்புகளுள்ளன.

அஷ்டமா சித்திகள் பெற்ற சித்தர்களாக அகத்தியர், திருமூலர், போகர், கொங்கணார், தேராயர், கோரக்கர், கருவூரார், இடைக்காடார், சட்டமுனி, சுந்தரநார், ராமதேவர், பாம்பாட்டி, மச்சமுனி, குடம்பைச் சித்தர், அழுக்காணிச் சித்தர், அகப்பைச் சித்தர், நந்தி தேவர் மற்றும் ஸ்ரீ காகபுஜண்டர் போன்ற பதினெட்டுச் சித்தர்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள், மொழிக்கு, சித்த மருத்துவத்திற்குப் பங்களிப்புச் செய்தவர்கள். மானிட வாழ்க்கைத் தத்துவங்களை நூல்களாக ஆக்கித் தந்த வழிகாட்டிகள். தியானம் மற்றும் யோகாவை உலகிற்கு அறிமுகப் படுத்தியவர்களும், கற்றுக் கொடுத்தவர்களும் சித்தர்களே. தங்களுக்குப் பின்னைய யுகங்களில் நடக்கப் போவதை முன்னரே குறித்து வைத்தவர்கள். சித்த மருத்துவக் குறிப்புகள் இவர்களால் ஆக்கப்பட்டவையே. இக்குறிப்புகள் காணப்படுகின்ற ஏடுகள்தான் இப்போதும் மானிடர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. தமிழ் இலக்கியத்தின் தந்தையாகக் கருதப்பட்டவர் அகத்தியர். இவரால் ஆக்கப்பட்டதே முதல் தமிழ் இலக்கண நூலான அகத்தியம். உடல் மற்றும் உயிருடன் தொடர்பு பட்டு நிற்கின்ற திருமந்திரத்தையும், சைவ சித்தாந்தத்தையும் எமக்களித்தவர் திருமூலர். பல சித்த மருத்துவ நூல்களை நல்கியவர் போகர் சித்தர். அது மட்டுமல்ல நோய்களைத் தீர்க்கும் சக்தி வாய்ந்த நவ




-பாஷாண முருகன் சிலையை வடித்து மானிடர்கள் பயன் பெற வழிசமைத்தவர். போகரின் மகனாகக் கருதப்படுகின்ற கொங்கணார் 40 இற்குமதிகமான புத்தகங்களை எழுதி மருத்துவத்திற்கும், ஆன்மீகத்திற்கும் பங்களித்துள்ளார். சாஸ்திரத் துறையில் கைதேர்ந்த சித்தராகத் தேராயர் விளங்கியிருந்தார். கோரக்கநாதர் என்றழைக்கப்பட்ட கோரக்கர், கோரக்கர் பிரம்மஞானம், கோரக்கர் பிரம்மஞான சூத்திரம் மற்றும் கோரக்கர் கர்ப்ப சூத்திரத்தையும் உலகிற்களித்த சித்தராவார். தஞ்சாவூர்ப் பெருங்கோவில் நிருமாணத்தில் முக்கிய பங்களித்த கருவூரார் சித்தர் திருவிசைப்பா, கருவூரார் வாத காவியம் மற்றும் கருவூரார் சிவ ஞான போதகம் போன்றவற்றை எமக்களித்தவராவார். இடைக்காட்டுச் சித்தர் ரசவாதம் மற்றும் காயகர்ப்பத்திற்கு அளித்த பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது. சட்டமுனி வாத சூத்திரம், சட்டமுனி ஞான விளக்கம் போன்ற அரிய நூல்களை எமக்களித்தவர் சட்டமுனிச் சித்தர். சுந்தரநாதர் சித்தரால் ஆக்கப்பட்டவையே சுந்தரநாதர் சிவ ஞான யோகம் 32 மற்றும் சுந்தரநாதர் வாக்கிய சூத்திரம் 64 என்பவை. ராமதேவர் 1000 என்ற நூல் ராமதேவர் சித்தரால் ஆக்கப்பட்டது. பாம்பாட்டிச் சித்தரால் அஷ்டமா சித்திகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. நொண்டிச் சித்தர் என்று அழைக்கப்படுகின்ற மச்சமுனிச்சித்தர், மச்சேந்திர நாதர் என்ற நொண்டிச் சித்தர் பாடல் என்ற நூலை ஆக்கியுள்ளார். குடம்பைச் சித்தர் ஞான யோகாவையும், குடம்பர் சித்தர் பாடலையும் எமக்களித்துள்ளார். அழுக்காணிச் சித்தர், சித்தர் ஞானகோவையை நல்கியுள்ளார். அகப்பைச்சித்தர் ஞான சித்தி என்ற ஆக்கத்தை அளித்துள்ளார். நந்தி கலை ஞானம் 1000 என்ற நூலை ஆக்கியுள்ளார் நந்திதேவர் சித்தர். புஜண்டர் மெய் ஞான விளக்கம் 80 மற்றும் புஜண்டர் ஞானம் 19 என்பவற்றைத் தந்தருளியுள்ளார் ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர்.

அஷ்டமா சித்திகள் பெற்ற 18 சித்தர்கள் வரிசையில் சிறப்புமிகு ஸ்ரீ காகபுஜண்டர் என்ற சித்தர் ஒவ்வொரு புதிய யுகமும் தோன்றுகின்ற போதெல்லாம் அழிவின்றித் தோன்றுவதாக வரலாறு கூறுகின்றது. ஒரு யுகம் அழிகின்றபோது பறவை வடிவெடுத்து திருக்கைலாயத்தில் தங்கி, புதிய யுகம் தோன்றிய பின்னர் அந்த உலகிற்கு வந்து மக்களுக்கு வழிகாட்டுவதாகக் கூறப்படுகின்றது. இவருக்குப் பிடித்தமான பதம் "நற்பவி" என்பதாகவும், இதனை உச்சரிக்கின்ற இடத்திற்குத் தான் வருவேன் என்று அவர் வாக்களித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இன்றும் இவரது ஜீவ சமாதியில் (நாகமலையில்) மக்களது வேண்டுதல்கள் அனைத்தும் நிறைவேறுவது ஆனந்தம் கலந்த ஆச்சரியமாகும். இவரைப் போலவே போகர் சித்தரும் விசேடமானவர். ஏனெனில் மனிதர்கள் இறப்பின்றி வாழ்வதற்காக தனது வாழ் நாளில் சஞ்சீவினி மந்திரங்களைக் கற்றுக் கொள்வதற்குக் கடும் முயற்சியில் ஈடுபட்டவருக்கு இறந்தவர்களை மீட்கின்ற சஞ்சீவினி மூலிகைகள் காணக் கிடைத்ததும், பின்னர் அது கிடைத்ததனால் ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தன்னை மறந்து கொண்டாடியதால் ஏற்பட்ட சித்தர்களின் சாபத்தினால் அதை இழந்து பின்னர் உமாதேவியாரின் கட்டளைப்படி பழனியில் முருகனை வழிபட்டு, முருகனது அறிவுறுத்தலில் நவபாஷாண முருகன் சிலையை வடித்ததாகவும், அந்த சிலையின் அபிஷேகத் தீர்த்தம் இன்றும் அனைத்து நோய்களையும் தீர்ப்பதாகவும் நம்பப்படுகின்றது.

மானிடர்களை வழிப் படுத்தியதில் பாரிய பங்களிப்புச் செய்தவர்களாகச் சித்தர்கள் காணப்பட்டாலும், சித்தர்களை நெறிப்படுத்தியது இறை சக்தியன்றி வேறில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஈசன் தனக்கு நிகராக வருவதற்கான வாய்ப்பினை ஈசத்துவத்தினூடாக எமக்கு அளித்திருந்தும் அந்த வாய்ப்பினை நாம் பயன்படுத்துகின்றோமா என்ற வினா எம்முன் இருக்கின்றது. ஈசனுக்கு நிகராக வரவேண்டியதில்லை, பிறருக்குத் தீங்கிளைக்காது, பிறரது வளர்ச்சியில் நாம் மகிழ்ந்து, பொறாமை அற்றவர்களாக, ஆறறிவு படைத்த மனிதர்களாக வாழ்வதற்கு முயற்சிப்போம். இன்னல்களுடன் போராடுகின்ற மானிட குலத்தைக் காப்பதற்காக தியானத்திலிருக்கின்ற அனைத்துச் சித்தர்களும் உலக இயக்கத்துடன் இணைய வேண்டுமென்றும், எம்மை வழி நடத்த வேண்டும் என்றும் சித்தர்களை மனதார வேண்டுவோமாக.

**அன்பு மலரட்டும். ஆன்மீகம் ஒளிரட்டும்.**

# முத்தி தரும் பன்னிரு திருமுறைகள்



சித்தாந்த இரத்தினம்
**தம்பிப்பிள்ளை நந்திவர்மன்**
சிட்னி, அவுஸ்திரேலியா

பன்னிரு திருமுறைகள் அரிதாகப் பெற்ற மானிடப் பிறவியின் பயனான முத்தியைப் பெறுவதற்குப் பன்னிரு திருமுறைகள் பெரிதும் உதவும் என்பதைச் சென்ற இதழிலே பார்த்தோம்.

இந்த இதழிலே பன்னிரு திருமுறைகளைப் பற்றியும் அவற்றை எப்படி இலகுவாக எமது வாழ்விலே இணைக் கலாம் என்பது பற்றியும் பார்ப்போம்.

பன்னிரு திருமுறைகளும் இறைவன் சைவத் தமிழர்களுக்குக் கொடுத்த அற்புதமான பெருங்கொடை யாகும்.

இவற்றிலே முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்கள். அவற்றைத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிச் செய்துள்ளார்கள். இத்திருமுறைகளிலே 8,250 தேவாரங்கள் உள்ளன. அவை திருத்தலங்களின் சிறப்பையும், அவற்றிலே உமையொரு பாகனாக எழுந் தருளி இருக்கின்ற சிவபெருமானின் திருவுருவையும், பெருமையையும் கூறும் பாடல்களாக அமைந்துள்ளன.

எட்டாவது திருமுறையிலே திருவாசகமும் திருக் கோவையாரும் உள்ளன. மாணிக்கவாசகர் இதனை அருளிச் செய்துள்ளார். சிவானுபவப் பிழிவாகப் படிப்போர் நெஞ்சை உருக்குவனவாகத் திருவாசகப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஒன்பதாவது திருமுறையிலே 9 அருளாளர்கள் அருளிய 301 திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடல்கள் அமைந்துள்ளன. இவையும் சிவானுபவத்தை மேலும் வளர்ப்பனவாக உள்ளன.

மூவாயிரம் பாடல்கள் கொண்ட திருமந்திரம் பத்தாவது திருமுறையாக அமைந்து நுட்பமான சைவ சித்தாந்தக் கருத்துகளை விரிவாகச் சொல்கின்றது. முத்தி தரும் பல்வேறு வழிகளை மிகவும் விபரமாகச் சொல்லும் பாடல்கள் அவை.

பிரபந்தங்களும் தோத்திரப் பாடல்களும் கொண்ட பதினொராவது திருமுறை 12 அருளாளர்களால் அருளப் பட்டது. சிவபெருமானே அருளிய ஒரு பாடல் இத்திருமுறை யின் முதற் பாடலாக அமைந்து இதனைச் சிறப்பிக்கின்றது.

திருத்தொண்டராக இருந்த 63 அடியார்களினதும் 9 தொகை அடியார்களினதும் வரலாற்றையும் சிறப்பையும் 4,272 பாடல்களில் சொல்லும் திருத்தொண்டத் தொகை என்னும் பெரிய புராணம் பன்னிரண்டாவது திருமுறையாக அமைந்துள்ளது. இலக்கியச் சுவை, பக்திச் சுவை, திருத்தொண்டர் பெருமை, பண்டைச் சைவத் தமிழரின் உயரிய வாழ்வியல் முறை எனப் பல்வேறு சிறப்புகளைச் சொல்லும் உன்னத காவியமாகப் பெரிய புராணம் அமைந்துள்ளது. இதனைச் சோழ மன்னனின் முதல் அமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமான் அருளிச் செய்துள்ளார்.

வேறு எந்த மொழியிலும் இல்லாத வகையில் மொத்தம் 18,246 பாடல்களைக் கொண்ட பக்திக் கருவூலமாக இத்தொகுப்பு அமைந்துள்ளது நாம் பெற்ற பெரும் வரம்!

வேதங்களில் சிவபெருமானின் வடிவமாகச் சொல்லப் படுகின்ற 11 சம்மிதை மந்திரங்கள் உண்டு. இதன் அடிப்படையிலேயே நம்பியாண்டார் நம்பி அவர்கள் இராசராச சோழன் திருமுறைப் பாடல்களைத் தொகுக்கச் சொன்னபோது அவற்றை 11 திருமுறைகளாகத் தொகுத்தார். பின்னால் வந்த பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

இவற்றை அருளிய அருளாளர்களின் வரலாற்றைப் படிக்கும் போது சிவபெருமான் எவ்வளவு பெருங்கருணை கொண்டு எமக்காக இவற்றைத் தந்திருக்கின்றார் என்பது தெளிவாகும்.

முதல் மூன்று திருமுறைகளையும் அருளிய திருஞான சம்பந்தப் பெருமான் முருகப் பெருமானின் அவதாரம் என்றே முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட அருணகிரிநாதர் தனது திருப்புகழ்ப் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தருக்கு இறைவன் உமையம்மையோடு எழுந்தருளி ஞானப்பால் ஊட்டுவித்து ஆட்கொண்டே தேவாரங்களை அருள வைத்தார்.

சமண மதத்திலே சேர்ந்திருந்த திருநாவுக்கரசரைச் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டு தேவாரங்களை அருள வைத்தார்.

தன்னோடு அணுக்கத் தொண்டராக இருந்த ஆலால சுந்தரரை இவ்வுலகுக்கு அனுப்பி அவரைத் தடுத்தாட் கொண்டு தேவாரங்களை அருள வைத்தார்.

பாண்டிய மன்னனிடம் முதன் மந்திரியாக இருந்த மாணிக்க வாசகரைக் குருவாக எழுந்தருளி ஆட்கொண்டு திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் அருளப் பணித்தார்.

இதனால் தான் பன்னிரு திருமுறைப் பாடல்களும் மிகவும் சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன. இவற்றை அருளியவர்கள் இவற்றைப் பாடிப் பல அற்புதங்களையும் நிகழ்த்தி இருக்கின்றார்கள். இறந்தவர்களை உயிர்ப் பித்திருக்கின்றார்கள். நோய்களை நீக்கி இருக்கின்றார் -கள். கல்லைத் தோணியாக மிதக்கச் செய்திருக்கின்றார்கள். சிவப்பணிக்காகப் பெருமளவு பொன்னையும் பெற்றிருக் கின்றார்கள்.

தேவாரங்களைப் பாடிய நாயன்மார்கள் அவற்றைப் பத்து அல்லது பதினொரு பாடல்கள் கொண்ட பதிகங்களாகப் பாடி உள்ளார்கள். சம்பந்தரும் சுந்தரரும் ஒவ்வொரு பதிகத்திலும் திருக்கடைக்காப்பு என்னும் நிறைவுப் பாடலில் அந்தப் பதிகத்தைப் பாராயணஞ் செய்வதால் என்ன பயன் ஏற்படும் என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றார்கள். இவையெல்லாம் சிவபெருமானின் அருளாணை வழி நின்று அருளப்பட்டவை ஆதலால் இப்பதிகங்களை உள்ளன்போடு பாராயணஞ் செய்யும் அன்பர்கள் இன்றும் அந்தப் பலன்களைப் பெற்று வருகின்றார்கள். அடியேன் வாழ்விலும் பல சம்பவங்கள் இதனை உறுதிப்படுத்தும் வகையிலேநிகழ்ந்துள்ளன.

திருவெண்காட்டுப் பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாடலிலே சம்பந்தர் அப்பதிகத்தைப் பாடியவர்கள் "மண் பொலிய வாழ்ந்தவர் போய் வான்பொலியப் புகுவாரே" என்று பலன் கூறி நிறைவு செய்கின்றார். அந்த வகையிலே இத் திருமுறைப் பாடல்களைப் பாராயணஞ் செய்வதால் எமக்கு முத்தி கிடைப்பது மட்டுமல்ல இவ்வுலக வாழ்வும் மிகவும் சிறப்புடையதாக அமையும் என்பது உறுதி

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பாடல்களைப் பாராயணஞ் செய்வது நல்லது தான், ஆனாலும் இத்தனை ஆயிரம் பாடல்கள் இருக்கின்றனவே என்று ஓர் அயர்வு ஏற்படுவது இயற்கையே. உண்மையில் எமக்கு இன்று கிடைத்துள்ள பாடல்கள் அருளப்பட்ட பல்லாயிரக் கணக்கான பாடல்களில் ஒரு சிறு தொகை தான். மற்றவற்றைக் கறையான் மூலம் அரிப்பித்து இறைவனே அவற்றை மீளப் பெற்றுக் கொண்டு விட்டார்!

திருமுறைப் பாடல்களைப் பாட விரும்புபவர்கள் முதலிலே ஒரு தேவாரத்தையும் ஒருபெரிய புராணப் பாடலையும் பாடலாம். 'தோடுடைய செவியன்' என்னும் தேவாரத்தையும் 'உலகெலாம்' என்னும் பெரிய புராணப் பாடலையுந்தெரியாதவர் தான் யார்? எனவே அதுவே நல்ல தொடக்கம்! இதிலே முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய இரு விடயங்கள் உண்டு. ஒன்று உள்ளன்போடு இவற்றைச் சிவபெருமானின் பெருங்கருணையை எண்ணி நெகிழ்ந்து பாட வேண்டும்.மற்றது தினமும் பாட வேண்டும்.

இந்தச் சமயத்திலே, எனக்குப் பாடத் தெரியாதே, பாடக் கூடிய நல்ல குரல் வளம் இல்லையே என்றெல்லாம் உங்கள் உள்ளத்திலே பல தடைகள் எழலாம். அதற்கும் சம்பந்தரே வந்த வண்ணம் பாடலாம் என்று வழிகாட்டி இருக்கின்றார்.

அதன் பின்னர் ஒரு திருவாசகத்தைச் சேர்த்துப் பாடலாம். சில வாரங்கள் செல்ல திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பவற்றையும் சேர்த்துப் பஞ்ச புராணமாகப் பாடலாம். இதற்கு உதவும் வகையிலே பல தொகுப்புகள் இருக்கின்றன. அடுத்த கட்டமாக ஒவ்வொரு திருமுறையிலும் இருந்து ஒரு பாடலாக 12 பாடல்களைத் தினமும் பாடலாம்.

அடுத்து இவற்றுடன் சில தேவாரப் பதிகங்களையும் சேர்த்துப் பாடலாம். 'வேயுறு தோளி பங்கன்' என்று தொடங்கும் கோளறு பதிகம் முதலிலே பதிகமாகப் பாடக் கூடிய ஓர் அற்புதமான பதிகம்!

அடுத்து ஓதுவது என்னும் நிலையைக் கடந்து அந்தப் பாடல்கள் சொல்லும் கருத்தையும் படித்து அவை பற்றிச் சிந்திக்கலாம். அப்படிச் செய்யும் போது கிரியை நெறியில் இருந்து பரமுத்தி தரும் ஞான நெறியில் நீங்கள் இணைந்து விடுவீர்கள்!

பன்னிரு திருமுறைப் பாடல்களும் அவற்றின் கருத்துகளும்www.thevaaram.orgஎன்னும் இணைய தளத்திலே கிடைக்கின்றன. இசையோடு பாடிப் பழக விரும்பும் அன்பர்கள் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் நடாத்தும் gurupaatham யூடியூப் காணொளிகளையும் பார்த்துப் பாடிப் பழகலாம்.

நிறைவாகப் பன்னிரு திருமுறைகளையும் முற்றாக ஓதும் ஞான வேள்வியையும் அன்பர்கள் செய்யலாம். இது பன்னிரு திருமுறைப் பாடல்களையும் தினமும் சில பாடல்களாகப் பாராயணஞ் செய்து நிறைவு செய்வது. தினமும் சுமார் 50 பாடல்களைப் பாராயணஞ் செய்தால் ஓர் ஆண்டில் இந்த ஞான வேள்விச் சாதனையை நீங்கள் நிகழ்த்தி விடலாம்! அப்படி ஓதி நிறைவு செய்யும் போதுஉங்கள் உள்ளத்திலும், வாழ்விலும் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்!

இறைவனே இந்தக் கட்டுரையை நீங்கள் படித்து உய்ய வேண்டும் என்று உங்களுக்கு வழிகாட்டி இருக்கின்றார். எனவே நாளை செய்வோம் என்றில்லாமல் இன்றே பதிகப் பெருவழி என்று சிறப்பிக்கப்படும் திருமுறைப் பாராயணத்தைத் தொடங்கி விடுங்கள்!

# சாஸ்திரம் பிரமாணம்

தெலுங்கில்: பிரம்மஸ்ரீ சாமவேதம் சண்முக சர்மா
தமிழில்: ராஜி ரகுநாதன்

பாகம் மூன்று. (தீபம் 26 சுடர் 01 இதழின் தொடர்ச்சி)

## வேத மந்திரம் என்றால் என்ன?

வேதத்தில் கூறப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு மந்திரங்கள் என்று பெயர். அவற்றில் சொற்களுக்கு மட்டுமின்றி தெய்வீக ஒலிக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. அதனால் வேத மந்திரங்கள் வெறும் உச்சரிப்பின் மூலம் கூட சக்தியளிக்கக் கூடியவை.

மந்திரம் என்றால் சக்தி நிரம்பிய சொற்கள் என்று பொருள். அவ்விதமாக நாம் சிந்தித்துப் பார்க்கையில் வேதத்தில் இருக்கும் மந்திரங்கள் பலப்பல அர்த்தங்களை நமக்குத் தெரிவிக்கின்றன என்பது புரிகிறது.

வேத மந்திரத்திற்கு இதுதான் பொருள் என்று அத்தனை எளிதாகக் கூறிவிட முடியாது. வேதமந்திரங் களைப் புரிந்து கொள்வதற்கு ஆறு சாஸ்திரங்களின் உதவி தேவை என்கிறது சம்பிரதாயம். அந்த ஆறு சாஸ்திரங்களுக்கு ஷட் அங்கங்கள் என்று பெயர். சிக்ஷா, வியாகரணம், நிருக்தம், சந்தம், ஜோதிடம், கல்பம் இந்த ஆறு சாஸ்திரங்களிலும் நிபுணத்துவம் பெற்றவர்கள் மட்டுமே வேத மந்திரத்திற்குப் பொருள் கூற முடியும்.

வேதத்திற்கு இத்தகைய ஆறு வகை சாஸ்திர அறிவோடு பொருள் கூறியவர்களுள் சாயிநாச்சாரியார் ஒருவர். அவர் மிக அழகாக வேதத்திற்கு நிருக்தமும் பாஷ்யமும் எழுதி உள்ளார். நிருக்தம் என்றால் வேதச் சொற்களுக்கான நிகண்டு, அகராதி என்று பொருள். இதனை அனுசரித்து பாஷ்யம் அதாவது பொழிப்புரை எழுதுகையில் ஒரு வார்த்தை கூறுகிறார். நான் வெறும் ஒரு விதத்தில் பொருள் கூறுகிறேனே தவிர வேதத்திற்கு இன்னும் எத்தனையோ அர்த்தங்கள் உள்ளன என்று குறிப்பிடுகிறார். இதனை மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

அதாவது தற்போது நமக்கு இருக்கும் பௌதிக நிலையைப் பொறுத்து வேத மந்திரங்களுக்கு ஒரு விதத்தில் பொருள் கொள்கிறோம். ஆனால் வேத மந்திரங்களுக்குள் இன்னும் எத்தனையோ அர்த்தங்கள் மறைந்திருக்கின்றன.

அர்த்தங்கள் எத்தனை மறைந்திருந்தாலும் சிலவற்றை மட்டுமே நாம் பொருள் புரிந்து கொள்வது எந்த விதத்தில் சரியானது? எந்த விதத்தில் அது முழுமையானது? என்று கேள்வி கேட்டுக் கொண்டால் ஓரளவிற்கு நாம் பொருள் கொள்ள இயலுமே தவிர வேதம் நாம் கொள்ளும் அர்த்தங்களை விட இன்னும் எத்தனையோ அர்த்தங் களோடு கூடியது என்னும் புரிதல் நமக்கு இருந்தால் அதுவே போதும்!

அதனால்தான் சிலர் வேதத்தில் இருக்கும் வான் மண்டல ரகசியங்களை எடுத்துக் கூறுகிறார்கள். சிலர் விஞ்ஞானத்தோடு தொடர்புடைய சாஸ்திரங்களைப் பற்றி எடுத்துக் கூறுகிறார்கள். இவையனைத்தும் அதில் உள்ளன.

வேதத்திலுள்ள ஒவ்வொரு மந்திரத்திற்கும் மூன்று விதமான பொருள் இருக்கும் என்று வேத சாஸ்திரமே தெரிவிக்கிறது. இதனைக் கொண்டு அத்தனை பொருட் களையும் எவ்வாறு அறிவது என்பதையும் கூறுகிறார்கள். ஒவ்வொரு மந்திரத்திற்கும் அதியக்ஞம், அத்யாத்மம், அதிதெய்வம் என்ற மூன்றின்படி மூன்று வித பொருள் களைக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.

அத்யாத்மம் என்பதற்கு பௌதீகப் பொருள் என்று விளக்கம் கொள்ளலாம். அதிதெய்வம் என்றால் தேவதை களைப் பொறுத்துப்பொருள் கொள்வது. அதியக்ஞம் என்றால் யக்ஞத்தைப் பொறுத்துப் பொருள் கொள்வது. யக்ஞத்தின் படியான வியாக்கியானத்தைத்தான் சாயி நாச்சாரியார் அளித்துள்ளார்.

வேதத்தில் உள்ள மந்திரங்களை ஆராய்ந்தால் அற்புதமான தனிமனித மேன்மைக்குப் பயன்படும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. அவற்றை நாம் மனித குலத்தின் மேன்மைக்கான தர்மோபதேசங்கள் என்று எடுத்துக் கொள்ளலாம். தர்மம் என்றால் உத்தமமான தனி மனித நடத்தை என்ற ஒரு பொருள் போதும்!

தனி மனித நடத்தையைப் பண்படுத்துவதே தர்மத்தின் நோக்கம். பண்படுத்தப்பட்ட தனி மனித நடத்தையோடு

வாழ்வதே தர்மம். அத்தகைய தர்மத்தையே வேதம் போதிக்கிறது.

அதுமட்டுமல்ல. இறுதியில் சூட்சுமமான வேதாந்த தத்துவ வித்யையைப் போதிக்கிறது. இத்தனை விஸ்தார மாகக் கருத்துக்களைக் கூறும் வேதத்தின் பொருள் சிறப்புகளை நாம் சிந்தித்துப் பார்க்கையில் இத்தனைவித பொருள் பொதிந்த வார்த்தைகள் எவ்வாறு உற்பத்தி யாயின என்ற வியப்பு ஏற்படுகிறது.

அதற்குக் காரணம் என்னவென்றால் மிகத் தீவிரமான ஆழ்ந்த தவத்தின் மூலம் சாதாரண அறிவிற்கு அப்பாற்பட்டு செல்கிறார் ரிஷி. நீண்டகால ஆழ்ந்த தவத்தினால் ரிஷிகளின் புத்திக்கூர்மை மலர்கிறது. அத்தகைய புத்திக் கூர்மையால் பெறும் அறிவாற்றலின் மலர்தலை புலன்களுக்கு அப்பாற்பட்ட ஞானம் என்கிறோம்.

உலகில் எந்தக் கல்வியறிவைப் பற்றிக் கூறினாலும் அவற்றைப் புலன்களின் எல்லைக்கு உட்பட்டதாகவே அறிகிறோம். புலன்களுக்கு அப்பாற்பட்ட ப்ரக்ஞை பற்றி சாமானிய மனிதனால் எடுத்துக் கூற இயலாது.

தவத்தின் மூலம் சமாதி நிலையை அடைந்தவர்கள் இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட அறிவாற்றலால் சாசுவத -மான உண்மைகளை அறிந்து கொள்கிறார்கள். அவ்வாறு தரிசித்த சத்தியங்களை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.


அவற்றையே வேதமந்திரங்கள் என்கிறோம். அவ்வாறு அறிந்து கொண்டவர்களை ரிஷிகள் என்கிறோம். அவர்கள் அறிந்து கொண்ட சத்தியங்களை வேதம் என்கிறோம்.

அதனால் இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட உயர்ந்த புத்திக் கூர்மையோடு சமாதியில் ரிஷிகள் தரிசித்துச் சொல்லும் வார்த்தை, சாமானிய நிலையில் இருப்பவர் களுக்குப் புரியாது. அதனால் அதனை அவ்விதமே உயர்வாகக் கௌரவிக்கிறோம் என்பது இதில் உள்ள சிறப்பு.

அதன் கருத்துக்களை நாம் புரிந்து கொண்டாலும் இல்லாவிட்டாலும் அந்த வேத வாக்கியங்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். ஏனென்றால் அவை சமாதி நிலையில் இருந்து வெளிப்பட்ட சொற்களாதலால் அவற்றை நாம் பகவானின் சொற்களாகவே ஏற்க வேண்டும். புலன்களுக்கு அப்பாற்பட்ட சப்தங்கள் இறைவனின் சொரூபமே!

பகவானோடு ஒன்றுபட்ட ரிஷி, லௌகீகமான அம்சங்களுக்கு அப்பாற்பட்டு இருப்பார். அதனால் சர்வ அதீதமான சத்தியத்தை அவர் வெளிப்படுத்துவார். அதன் காரணமாகவே சமாதி ஸ்திதியிலிருந்து கூறப்பட்ட உண்மைகளில் எத்தனை உட்பொருள் உள்ளது என்பது மீண்டும் அந்த நிலையை எட்டியவருக்குத்தான் புரியுமே தவிர சாமானியர்களுக்கு விளங்காது.

ஒவ்வோர் முறை வேத வாக்கியங்கள் அர்த்தங் களுக்கு அதீதமாகக் கூட இருக்கும் என்று கூறப்படுகிறது. இங்கே அர்த்தங்களுக்கு அப்பாற்பட்டு இருக்கும் வேத



வாக்கியங்களால் நமக்கு என்ன பயன்? என்ற கேள்வி எழுகிறது.

பயன் என்பது அந்த வாக்கியங்களின் இருப்பிலேயே இருக்கிறது என்பதை நாம் கூறி வருகிறோம். அந்தச் சொற்களை உச்சரிக்கும் போது ஏற்படும் சக்தி அலை களாலேயே நன்மைகள் நிறைவேறுகின்றன.

உலகிலேயே, இந்தச் சொல்லை இவ்வாறுதான் உச்சரிக்கவேண்டும். இந்தச் சொல்லை இந்த ஸ்வரத்தோடு தான் உச்சரிக்க வேண்டும் என்று கூறிய ஒரே சாஸ்திர நூல் வேதம். இதர நூல்கள் எதுவுமே இந்தச் சொல்லை இவ்வாறுதான் உச்சரிக்க வேண்டும் என்று கூறுவதில்லை. சங்கீத சாஸ்திரத்தில் மட்டும் அட்சரங்களை இந்த ஸ்வரத்தில் உச்சரிக்க வேண்டும் என்று கூறுவார்களே தவிர மீதி உள்ள எந்த நூலிலும் வாக்கியங்களை இந்த ஸ்வரத்தில்தான் உச்சரிக்க வேண்டும் என்று கூறவில்லை.

வேதத்தில் மட்டுமே அவ்வாறு கூறியுள்ளார்கள். இதனைக் கொண்டு தெரிவது என்னவென்றால் வேதத்தில் பொருள் எத்தனை முக்கியமோ ஒலியும் அதே அளவு முக்கியம்.

நம் தினப்படி வாழ்க்கையில் கூட ஒரே சொல்லைக் கூறுகையில் பல வேறுபாடுகளைக் காண்கிறோம். சொல் ஒன்றேயானாலும் அன்போடு வாங்க! என்று கூறுவதற்கும் வெறுப்போடு அதே சொல்லைக் கூறுவதற்கும் உள்ள சப்த வேறுபாட்டை நாம் கவனிக்க முடியும்.

வேத மந்திரங்களில் ஸ்வரம் அத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது. உதாதா, அனுதாதா, சரிதா என்ற மூன்று முக்கியமான ஸ்வரங்கள் பற்றி வேத மந்திரங்களில் கூறியுள்ளார்கள். அந்தந்த ஸ்வரங்களில் உச்சரிக்கும் போது பொருளிலும் மாற்றமேற்படுகிறது. அதனால் வேதத்திற்கு ஸ்வரம் இன்றியமையாதது.

இக்காரணத்தால் தான் வேதத்தைக் கற்றுக் கொள்வதில் கூட ஒரு திட்டவட்டமான சம்பிரதாயத்தை விதித்துள்ளார்கள். அவ்விதம் சம்பிரதாயத்திற்கு உட்பட்டு வேதத்தைக் கற்றுக் கொள்ளும்போது அந்த உச்சரிப்பு முறையில் இருக்கும் தெளிவும் அதன் உண்மையான வடிவமும் நமக்குப் புரிய வருகிறது.

இன்னும் ஒரு வியப்பான விஷயம் என்னவென்றால் உலகத்தில் உள்ள பல நூல்களும் பல வித்யைகளும் காலப்போக்கில் மாற்றங்களுக்கு ஆளாகி வருகின்றன. ஆனால் வேதம் ஒன்று மட்டுமே எத்தனை யுகங்கள் கடந்தாலும் ஒரே விதமாக உச்சரிக்கப்படுகிறது. அதில் எந்த மாற்றமும் காணப்படாது.

இதனைக் கொண்டு எத்தனை பாதுகாப்பான, கட்டுப் பாடான அமைப்பு வேதத்திடம் உள்ளதென்பதை அறிய முடிகிறது. வேதத்தின் வடிவத்தை நாம் புரிந்துகொள்ள முயலும் போது இத்தனை விஷயங்களையும் நினைவில் கொள்ள வேண்டும்.

அவ்வாறு புலன்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் ரிஷிகள் தரிசித்த சாஸ்வத உண்மைகளின் தொகுப்பே வேதங்கள். அதே ஸ்திதிக்குச் சென்று சேர்ந்த மற்ற ரிஷிகள் அவற்றை அறிந்து கொண்டு நமக்குப் புரியும் வண்ணம் எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்த நூல்களைப் புராணங்கள், இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள் என்கிறோம்.

வேதங்களில் கூறிய சத்தியங்களை மீண்டும் அதுபோன்ற சமாதி நிலைக்குச் சென்ற வியாசர் முதலான மகரிஷிகள் புரிந்துகொண்டு கருணையோடு நமக்குப் புரியும் வண்ணம் கதை வடிவிலும், போதனை வடிவிலும் அளித்துள்ளார்கள்.

வேதங்களில் கூறப்பட்டவற்றையே இதர சாஸ்திரங் களில் நம் ஸ்தாயியில், நமக்குப் புரியும் வண்ணம் வழங்கியுள்ளார்கள். அதிலும் கூட கற்றறிந்தோர் அறிவு நிலை முதல் சாமானியர்களின் அறிவு நிலை வரை புரிந்து கொள்ளும் திறனில் பல வித வேறுபாடுகள் இருக்கும்.

மொத்தத்தில் வேதங்களில் கூறப்பட்டுள்ள ஞானமே நமக்குப் பயன்படும் வண்ணம் புராணங்கள் போன்ற வற்றில் கிடைக்கின்றன என்பதை அறிய வேண்டும். வேதமே விஸ்தாரமாக இத்தனை நூல்களாக நமக்குக் கிடைக்கின்றன.

(தொடரும்)

## முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நல்வாக்கு

எந்த அளவுக்கு மனங்கலங்காமல் இருக்கிறாயோ அந்த அளவுக்குச் சக்தி உண்டாகும். ஆண்மையற்றவனே துயரப்படுவான். சினம் கொள்வான். சினமும் துயரமும் கொள்பவன் கஷ்டத்தை தாங்கி நிற்கமாட்டான். தோல்வியடைவான்.

கெட்ட எண்ணங்களைப் போக்குவதற்கு நல்ல எண்ணங்களை எண்ணுவது வழி. பகைவனது பகைமையை மறப்பதற்குத் தோழனது அன்பை நினைப்பது வழி. இருளை நீக்க விளக்கைக் கொண்டு வருவதுதானே வழி.

# சீரிய வாழ்வுப் பாதை காட்டும் சைவம்

திருமதி தமிழின்பம் மாணிக்கராஜா

நாம் வாழும் சமூகமானது சீராகவும், சிறப்பாகவும், நீதியாகவும் இயங்குவதற்கான ஒழுங்கு முறையே சமயம் எனலாம். இதனை நாம் வெறும் வேதத்தினாலும், ஏனைய தத்துவங்களினாலும் பெற்று விட முடியாது. அது ஒரு வாழ்வு நெறி. அதாவது மக்கள் தம்மை அனுபவசாலிகள் ஆக்கி, அந்த அனுபவத்தினை தம் வாழ்வு வழியாக்கி தம்மை மாக்களாக்காது மக்களாக வாழ முயலும் பாதையாகும். மேலும் அந்த வாழ்வு வெறும் விரதம், விழாக்கள் என்றும், கிரியை கோவில் வழிபாடென்றும் முற்றுப் பெறுவதில்லை. எங்கெல்லாம் எமக்கு மீறிய செய்கைகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் எம்மை மீறிய சக்தியொன்று எம்மை இயக்குகின்றது என எண்ணத் தோன்றுகின்றது. அந்தச் சக்தி தான் இந்த அண்டசராசரங்கள் யாவற்றினையும் இயக்குகின்றது என்ற உண்மையினை யாவரும் ஏற்றுக் கொள்ளத் தொடங்குகின்றனர். கடவுள் உண்டு என நம்புபவர்கள் 'அவனருளாளே அவன் தாள் வணங்குபவர்கள்' எனலாம். 'அரிது அரிது மானிடராகப் பிறப்பது அரிது' என ஔவை மூதாட்டி எமக்கு அருளி நாம் வாழ வழி காட்டியுள்ளார். இந்த மனிதப் பிறவி தப்பின் எப்பிறவி வாய்க்குமோ என ஏங்கினார் தாயுமானவர். இதனால் நாம் பிறந்ததன் பயன் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கே என எண்ணி எம் வாழ்வுப் பாதையினைச் செம்மையானதாக்க முயல வேண்டும்.

நாம் வாழும் இந்த உலகத்தில் எத்தனையோ சமயங்கள் நிலவுகின்றனவாக இருந்தாலும் அவை யாவும் காட்டும் வாழ்வுப் பாதையானது ஒன்றானதாகவே விளங்குகின்றது. எங்கெங்கோ பெருக்கெடுக்கும் ஆறுகள் யாவும் கடலை நாடியே செல்வது போல இம் மதங்கள் யாவும் ஒரு பொதுவான குறிக்கோளினையே கொண்டு நிலவுகின்றன. 'எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டொழுகல்', 'மன்னுயிரையும் தன்னுயிராக எண்ணி அன்பு செலுத்தல்' என்னும் பண்பு இவை யாவற்றினுக்கும் பொதுவான கொள்கையாகும் என்றால் அது மிகையாகாது. அதிலும் எம் மதம் தன்னையே வருத்தி உள்ளத் தூய்மையுடன்



புனிதத் தன்மையையும் ஏற்படுத்தித் தீமைகளை அழித்து, தானம், தருமம் என்னும் நற்செயல்களைப் புரிந்து நன்றே வாழ வழி காட்டுகின்றது. அன்பினைத் தான் எம்மதம் போதிக்கின்றது. அன்பையும் அதனால் விளையும் பண்பினையும் ஆதாரமாகக் கொண்டு மக்களுக்கிடையில் புரிந்துணர்வினையும், ஒற்றுமையையும் வளர்ப்பதில் எம்மதம் போன்றே ஏனைய மதங்களும் வழிகாட்டுகின்றன என்பது உன்மை.

'அன்பு நெறியே தமிழர் நெறி' என்பது ஒரு கூற்று. அன்பு கொண்டவன் மனத்திலே இறைவன் விரும்பி உறைகின்றான். அன்பு செய்யாமல் தன் அகக் கண்ணை மூடிக் கொள்ளும் மனிதரினால் என்றுமே இறைவனைக் காண முடியாது. அன்பு செய்வதே இறை ஆராதனையாக முடிகின்றது. இதனால் தான்,

**"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்.**
**ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்புச் செயல் வேண்டும்"**

என இராமலிங்க சுவாமிகள் இறைனிடம் வேண்டு கின்றார். தன்னைப் போல பிறரையும் நாம் நேசித்தால் இறையருள் நிச்சயம் இலகுவிற் கைகூடும். நான், எனது குடும்பம், எனது உறவினர் என்று மட்டும் வாழ்ந்து விட்டால் போதாது. அதே மனப்பாங்கு ஏனையோரிடமும் ஏன் ஏயை உயிர்களிடத்துங் கூட உருவாக வேண்டும் எனச் சைவம் போதிக்கின்றது. அதனால் தான் இறவாத-

என்றுங் குன்றாத அன்பு வேண்டுமென நம் அடியவர்கள் இறைவனை யாசித்தனர்.

**''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே...... ''**

என்னும் பாடல் சைவர்களின் முழு முதல் தெய்வமான சிவனே அன்பு மயமாகத் தான் காட்சி தருகிறார் என்பதனை எமக்கு வலியுறுத்துகின்றது. ஆதியும் அந்தமும் இல்லா எம் இறைவன் அன்பே உருவானவர். அந்த அன்பு எம் மனத்தில் இருந்தால் தான் கருணை அங்கு பிறக்கும். கருணை பிறந்தால் இறையருள் கைகூடும் என்பது திருமூலர் கருத்து. இதனைப் பார்க்கும் போது என்ன தோன்றுகின்றது? சமயம் என்றால் எம்மை விட்டுப் பிரித்துப் பார்க்கக் கூடிய அம்சம் என நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதனை அல்லவா? எம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து, எமது நாளாந்த வாழ்வில் தவழ்ந்து புரண்டு எம்மோடு எம்மையறியாமலே ஒட்டிக் கொண்டுள்ளது என்றால் மிகவும் பொருந்தும்.

மனிதராகப் பிறந்தவர் அன்பு செய்ய வேண்டும் என்கிறது சைவம். அதுவே இறை வணக்கமுமாகும் என்கின்றது. இக் கூற்று நாம் இறைவனை வணங்க வீண் ஆடம்பரம் தேவையில்லை என எமக்குப் புலப்படுத்துகின்றது. எமக்கு இயலுமான முறையில் நாம் இறைவனை வணங்கிக் கொள்ளலாம். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றிலும் இறைவனை எண்ணி வணங்கி வந்தாலே போதுமானது. மலர் அர்ச்சனையோ அல்லது பூசை புனருத்தானங்களோ தேவையில்லை. எமக்கு இயலுமான முறையில் எமது கடமைகள் இதுதான் என எண்ணி அதன்படி மனம் வைத்து நின்றொழுகினாலே போதும்.

**''யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறருக்கு இன்னுரை தானே...... ''**

என்னும் பாடல் இறைவனை நாம் வணங்கும் போது பசிய இலை ஒன்றினை அர்ச்சித்தே வந்தனை புரிந்தால் போதும் என்கின்றது. அதே போல எமக்குப் பல வகைகளிலும் பல உதவிகளைப் புரிந்து வரும் பசுவிற்கு உணவு கொடுப்பதன் மூலம் இறையருள் பெறலாம் என்கின்றது. அதனை விட நாம் நாள்தோறும் உண்ணும் போது பசித்தவர் முகத்தினை எண்ணி ஒரு பிடி அன்னத்தினை எடுத்து வைத்து உண்டாலும் போதும். அந்த எண்ணமே நாம் பிறருக்கு அன்னம் இட்ட பலனைப் பெறக்கூடியதாக அமையும் எனலாம். இவை யாவற்றுக்கும் மேலாகப் பிறருக்கு இன்னுரை சொல்வதுதான் சிறந்த அறம் என்கின்றது இப்பாடல்.

இதனை,

**''முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம் இன்சொலினதே அறம்...... ''**

எனத் திருக்குறளும் விளக்குகின்றது. அன்பைப் பேசிய எம்மதம் அடுத்து அறத்தினைப் பேசுகின்றது. 'யாதும் ஊரே யாவருங் கேளிர். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி......' என உயர்ந்த குறிக்கோள்கள் அன்பின் வழியில் தோன்றும். அந்த மனப்பக்குவம் ஏற்பட்டால் அறம் செய்வது இலகு, சுலபமாகின்றது. அந்த அறத்திற்கும் கூட எம்மதம் கட்டுப்பாடு விதிக்கவில்லை. யாவரும் தன் நிலையில் இருந்து தமக்கு இயலுமான முறையில் அறம் செய்ய வழிகாட்டுகின்றது.

**''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற......''** என்னுங் குறள், மனத்தால் பிறருக்குக் கெடுதல் செய்யாது இருப்பதே அறமாகும் என்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எம் சமூகம் அறத்தின் திறத்தினை நன்குணர்ந்து அதன்படி வாழ மக்களுக்கு வழிகாட்டியது. கட்டுப்பாட்டினை விதிக்கவில்லை. பாதையைக் காட்டியது, அதில் நடக்க நடை பயிற்றி விட்டது. அதனால் தான் அறம் என்றால் என்ன என வரையறை கூற முடியாது போனது. அறத்தினைப் பாரதியார்,

**''இன்னருங் கனிச் சோலைகள் செய்தல்**
**இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்**
**அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாராயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்ன யாவினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்...... ''**

எனக் குறிப்பிடுகிறார். அதாவது ஏழை மாணவன் ஒருவனுக்கு எழுத்துச் சொல்லிக் கொடுத்து அவன் அறிவு வளர வழி காட்டுவதே அறங்கள் யாவற்றிலும் சிறந்தது என்கின்றார். ஆமாம், தக்க நேரத்தில் தகுந்த உதவியைப் பிறர் கேட்காமலே நாம் உணர்ந்து செய்வது தான் சிறந்த அறமாகக் கருதப்படுகின்றது எனலாம். நாம் பின்பற்றும் சைவம் அறம் செய்வதற்குச் சுதந்திரம் தருகின்றது. அதனை நாம் பிழையாகப் பாவிக்கக் கூடாது. எமக்கு இயலுமான வழியில் அறம் செய்து, 'பிறவாப் பெரு வாழ்வு பெற முயலுவது' எமது கடமை. எமது வாழ்வு அனைத்திலும் சமய உணர்வு கலக்க வேண்டும். இந்த உலகத்தில் பிறந்த சகல உயிர் களுக்கும் இறைவனே தாய் தந்தை எனக் கருதினோமானால் எம் வாழ்வு அர்த்தமுள்ளதாகும். இத்தகைய சமயப் பண்பில் தோய்ந்து வாழ்ந்தமையால் சைவர்களது வாழ்வு வளம் பெற்றது. கலை உள்ளத்தினை இயற்கையாகவே பெற்றிருந்த அவர்கள் வானளாவிய கோபுரங்களுடன் கூடிய பல கோவில்களை அமைத்து அங்கு இறைவனை ஆடல் தெய்வமாகக் கண்டு வணங்கினர். அவன் அசைந்தால்



தானே எமது வாழ்வும் நகரும். உயிர்கள் மேல் கொண்ட அளவற்ற கருணையினால் இறைவன் அவர்களுக்கு அருள் வழங்குவதற்காக நடராஜர் தோற்றத்தில் கூத்தாடுகின்றார். 'கோயில்கள் இல்லாத இடங்களில் மக்கள் குடியிருக்கக் கூடாது' என்றனர் எம் முன்னவர். ஆலயங்களில் அமைவு பெற்றுள்ள இறை உருவத்திடம் அளவற்ற அருள் சக்தி, யாகங்களினாலும், அபிஷேகங்களினாலும் நிரப்பி வைக்கப் பட்டுள்ளது. அங்கு சென்று இறைவனைத் தொழுவதனால் நாம் பிறவியின் பயனை அடைகின்றோம். பக்தியில் முதிர்ச்சியில் இருப்பவர், அந்த இறைவனைத் தம் மனத்தகத்திலேயே கண்டும் தரிசிக்கின்றனர். உடம்பு என்னும் வீட்டினுள் மனத்தினை அகல் விளக்காக்கி, நாம் கொண்ட அறியாமையை அகற்றும் மெய் உணர்வினை நெய்யாக ஊற்றி, உயிர் என்னும் திரியினைச் சேர்த்து விசாலமான, ஞானமாகிய தீயினால் அந்தத் தீபத்தினை ஏற்றி அந்த ஒளியினை எம் ஊனக் கண்ணினால் கண்டு, தரிசித்து, வணங்கினால் வீரக்கழல் அணிந்து திகழும் கடம்ப மாலையை விரும்பும் முருகனது தந்தையின் கழல்கள் தெரியும் என நாவுக்கரசர் தான் பெற்ற அனுபவத்தினை,

**"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகழியாக**
**மடம் படும் உணர்நெய் அட்டி உயிரெனும் திரி மயக்கி**
**இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்**
**கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே...... "**

எனத் தெரிவிக்கின்றார். இந்த நிலை எல்லோருக்கும் வந்து விடாது. அதனால்தான் கோவில் வழிபாடு, சாதாரணமாக வாழும் எம் போன்றவர்களுக்குச் சிறந்ததாகக் குறிப்பிடு கின்றது சைவம். எம்மைத் தூய்மையாக்கி, எம் மனத் தினைத் தூய்மையாக்கி கோவிலுக்குச் செல்ல வேண்டும். அமைதியும் பணிவும் அங்கு ஏற்பட வேண்டும். அவ்வேளை மனச்சாந்தி ஏற்படும். இதனால் கட்டுப்பட்ட ஒழுங்கு வாழ்வு ஏற்படுகின்றது. மனிதனை ஒழுங்கான வாழ்வு வாழ, வழி காட்டவே சமயங்கள் தோன்றின. மனம், புத்தி, சித்தம் யாவற்றிலும் ஒழுக்கத் தன்மை ஏற்பட்டால் பூரண மனிதனாக வாழத் தகுதி உடையவன் ஆவான். மனிதன் மனிதனாக வாழ வேண்டுமல்லவா?

இவ்விதமாக நாம் எத்தனையோ எடுத்துக் காட்டுகளைப் பார்க்கலாம். சமயம் மக்களுடன் பின்னிப் பிணைந்து அவர்களால் அறிந்தோ அல்லது அறியப்படாமலோ, வேண்டு மென்றோ வேண்டாமென்றோ பின்பற்றப்பட்டு வருவதனை நாம் கண்கூடாகக் காணலாம். நாம் இறைவனது கருவிகளே அன்றி எம்மால் எதனையும் சுயமாக மேற்கொள்ள இயலாது. அந்த இறைவனை நாம் சரண் என அடைந்தால் அவன் எம்மைக் காத்து எமக்கு வேண்டியதனைத் தானே அருளி எம்மை மகிழ்விப்பான். நாம் எந்தக் கடவுளையும் வழிபடலாம். எந்த நெறியினையும் பின்பற்றலாம் . ஆனால் மனத்தில் கூட தீய குணங்கள் இல்லாது நாம் வாழ வேண்டும். இதற்கு எமக்கு வழி காட்டுவது சமய வாழ்வே எனலாம். அதிலும் எம் சைவம் எமக்குச் சுதந்திரத்தோடு கூடிய வாழ்வுப் பாதையினை அமைத்துக் காட்டுகின்றது. அதனை நாம் பிழையாக உணர்ந்து பின்பற்றக் கூடாது. அல்லது, அதனையே எமக்குச் சாதகமாக்கி எம் வாழ்வுப் பாதையினைச் சீரற்றதாக்கக் கூடாது. நீர்க்குமிழி போன்ற நிலையற்ற எம் வாழ்வுப் பாதை அன்பு மயமானதாக்கப் பட்டால் அதன் பின் நாம் வேண்டுவது எதுவுமே இருக்க முடியாது. அதனைத் தான் சைவம் எமக்குக் காட்டும் சீரிய பாதையில் நாம் எமக்கு இயலுமான விதத்தில் வாழ்வோமானால் இனிப் பிறவாப் பெருவாழ்வு பெறுவது சுலபமாகின்றது என்றால் மிகவும் பொருந்தும்.



# கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு வெளிப்படுத்தும் வாழ்வியல் கலைகளும் கலாசார விழுமியங்களும்

(ந. புவனசுந்தரம்)

## பாகம் 1

சக்தி வழிபாடு மிகத் தொன்மையானது. சக்தியின் மறுவடிவமாகக் கண்ணகை வழிபாடு கிழக்கிலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அதனால் ஆண்டு தோறும் நடைபெறும் உற்சவங்களில் ஊர் முழுவதுமே திரண்டு இவ் வழிபாட்டில் பக்திசிரத்தையோடு கலந்து கொள்வது பரவசமூட்டும் நிகழ்ச்சியாகும். இந் நிகழ்வு கிழக்கிலங்கை யில் திருகோணமலை தொடக்கம் திருக்கோயில் வரை பரந்துள்ளது. தமிழ்க் கிராமங்களில் கண்ணகை அம்மன் கோயில்கள் அதிகம் உள்ளன. இவை கண்ணகை அம்மன் ஊர்ச் சுற்றுக் காவியங்களில் பின்வரும் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தப் படுகின்றது.

***'பட்டிநகர், தம்பிலுவில், காரைநகர், வீரமுனை, பவிசுபெறு***
***கல்முனை, கல்லாறு, மகிழூர், எருவில்***
***செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, மண்முனை,***
***செல்வமுதலைக்குடா, கொக்கட்டிச்சோலை வட்டத்திக்கும்***
***புகழ் வந்தாறுமூலை,***
***அன்பான சிற்றாண்டி நகர்தனில் உறையும்***
***வட்டவப்பூங்குழல், மண்முனைக் கண்ணகை***
***மனதில் நினைக்க வினை மாறியோடிடுமே'***

இப்பாடலில் குறிப்பிடப்படாமல் இன்னும் பல கண்ணகை அம்மன் கோயில்கள் கிழக்கிலங்கையில் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றன.

கண்ணகை அம்மன் வழிபாடு பற்றிய பூர்வீக வரலாற்றை புரட்டிப் பார்க்கையில் இந்தியாவில் தஞ்சை மாவட்டத்தில் திருச்செங்கோட்டையில் கொடும்பாழூரில் செங்குட்டுவனால் கண்ணகைக்கு 'பத்தினிக் கோட்டம்' அமைத்துப்பிரதிட்டை செய்யும் காலத்தில் செங்குட்டுவனின் அழைப்பின் பேரில் இலங்கையிலிருந்து கஜபாகு வேந்தனும் சமூகம் கொடுத்து நிகழ்வில் கலந்து கொண்டு இலங்கை வரும்போது, கஜபாகு மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கக் கண்ணகி வழிபாட்டை இலங்கையிலும் பரப்பும் நோக்கில் சந்தன மரத்தினால் செய்த கண்ணகி உருவமும். ஒரு சிலம்பும், சந்தன மரப்பலகையால் செய்த பேழையில் வைத்துக் கஜபாகுவிற்குக் செங்குட்டுவன் கொடுத்தான் என்பதை

***'கடல் சூழ் இலங்கை கஜபாகு வேந்தனும்***
***எந்நாட்டங்க இமய வரம்பனும்***
***நன்னாட் செய்த நாளணி வேள்வியில்***
***வந்தீஈக ன்றே வணங்கினர் வேண்டத்***
***தந்தேன் வரமென்று எழுந்தது ஒரு குரல'***

என்னும் சிலப்பதிகாரப் பாடல் மூலம் இலங்கை வேந்தன் முதலாம் கஜபாகுவினால் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு கி.பி 2ம் நூற்றாண்டளவில் கொண்டுவரப்பட்டது என்பது தெளிவாகின்றது.

பாண்டிய அரசன் வெற்றிவேற்செழியன் யானை மேல் சந்தனப் பெட்டியையும், அரசனையும் ஏற்றி வேதாரணியத்தில் கொண்டு போய் விட, அங்கிருந்து மரக் கப்பலில் இலங்கையின் வடபால் காரைதீவுக்கும், கீரிமலைக்கும் இடையிலுள்ள திருவடிநிலையில் இறங்கி அங்கிருந்து அலங்கரிக்கப்பட்ட யானை மீது ஏற்றி ஊர்வலமாக மாகியப் பிட்டி, எழியாய், வழியாக அங்கணானாமக் கடவைக்கு வந்து அவ்விடத்திலே முதலாவது வழிபாடு நடாத்தப்பட்டது. அங்கிருந்து நாவற்குழியை அடுத்துள்ள வேலம்பிராய் என்னுமிடத்திற்கு வைகாசிப் பூரணையன்று வந்து சேர்ந்தது. பூரணைச் சடங்கு முதல் முதலில் அங்கேயே நடைபெற்றது.

அங்கிருந்து கரம்பகம், கோவிற்குளம். நாகர்கோயில், வன்னிப் புட்டுக்குளம், விழாங்குளம், முள்ளியவளை, வற்றாப்பளை, சாம்பல் தீவு, திருகோணமலை, தம்பலகாமம், பாலம் போட்டாறு, நீலாப்பளை வரையும் யானையில் ஊர்வல

மாகக் கொண்டு வரப்பட்ட சந்தனப்பேழை பின்பு அங்கிருந்து தாவளமாட்டின் மூலமாக, கிளி வெட்டிக்குக் கொண்டு வரப்பட்டு. பின்பு வாழைச் சேனைக்கு கொண்டு வரப்பட்ட பேழை பின்பு கோராவெளி, கொக்கட்டி மூலைக்கு வந்தபின் அங்கிருந்து வந்தாறுமூலை, ஈச்சந்தீவு, தாண்டவன்வெளி, கொக்கட்டிச் சோலை. முதலைக்குடா, மகிழடித்தீவு, மண்முனை, தாழைநகர், காத்தநகர், புதுக்குடியிருப்பு, செட்டிபாளையம், எருவில், மகிழூர், கல்லாறு, கல்முனை, வீரமுனை, காரைதீவு, தம்பிலுவில், பட்டிமேடு, பாணமை, கதிர்காமம், கண்டிவரை கொண்டு செல்லப்பட்டு அங்கு கோயில் கட்டப்பட்டு வழிபாடு தொடர்ந்து நடைபெற்றது. அங்கேயே சந்தனப்பலகையில் செய்யப்பட்ட பேழையும் சிலம்பும் கண்ணகை சிலையும் வைக்கப்பட்டுள்ளதாகச் செவிவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு கஜபாகு மன்னனால் நடத்தி வந்த பத்தினித் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியே கிழக்கு மாகாணக் கண்ணகை அம்மன் வழிபாடாகும்.

மேலும் தமிழ் மக்களுடன் பௌத்த மக்களும் இவ் வழிபாட்டை மேற்கொண்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும். இன்று பௌத்தர்களினால் கொண்டாடப்படும் 'பெரஹரா' என்பது வருடம் தோறும் பௌத்தர்களினால் கொண்டாடப்படும் நிகழ்வு ஆகும். இத்துடன் தெய்வமாடுதல், கட்டுச்சொல்லுதல், பறைமோழ மடித்தல், சிலம்பு ஒலித்தல், அம்மானைக்காய் ஒலித்தல், கட்டாடியார் பூசை செய்தல், போன்ற சடங்குகளும் இன்றும் பௌத்த கோயில்களில் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இத்துடன் 'திரு கணநாத் ஒபயசேகர' எனும் சிங்கள அறிஞர் 'பத்தினி தெய்வ வழிபாடு' பற்றிய ஒரு நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

அந்த வகையில் செட்டிபாளையத்தில் அமைந்துள்ள கண்ணகி ஆலயம் இப்பிரசேத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒன்று எனலாம். இவ்வாலய நிருவாகத்தில் கிரான்குளம், குருக்கள்மடம், செட்டிபாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை ஆகிய கிராமங்கள் பங்கு கொள்வதும், சடங்கு செய்வதும் ஒரு பாரம்பரிய சிறப்பை வெளிப்படுத்துகின்றது.

### வாழ்வியல் கலைகள்

கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் இணைந்ததாகப் பல வாழ்வியல் கலைகள் உள்ளன. அவையாவன,

காவியப்பாடல்களும், அகவைப் பாடல்களும், குளிர்த்திப் பாடல்களும், வெங்கல உடுக்கு அடித்தல்

கொம்புமுறி விளையாட்டு, போர்த்தேங்காய் அடித்தல்.

நாட்டுக்கூத்து, வசந்தன் கூத்து போன்ற இன்னோரன்ன கலைகளைக் குறிப்பிடலாம்.

மட்டக்களப்பு மாநிலத்தில் "அம்மன் கோதாரி" என் அழைக்கப்படும் அம்மை, கொப்பளிப்பான், வைசூரி, கண்நோய், கூகைக்கட்டு முதலான நோய்கள் மக்களை அணுகாதபடி அம்மனை வேண்டி மழைக்காவியம் பாடி வேண்டுவர், அதாவது மழை குன்றி வரட்சி மிகுந்த காலத்தில் இந் நோய்கள் மிக வேகமாகப் பரவித் துன்பமும், துயரமும் ஊட்டின. இவ்வேளையில் வேப்பிலையும் மஞ்சளும் இவற்றிக்கு மருந்து. கண்ணகை அம்மனுக்கு விழா நடாத்தினால் கண்ணகை மகிழ்ச்சி உற்றால் தான் மழைபொழியும் எனவும், கோதாரிகள் குறையுமெனவும் மக்கள் நம்பினார்கள். இதனாலேயே கண்ணகையை மன்றாடிக் காவியம் பாடினர் இப்பாடலில் ஒன்று......

***'கப்பல் திசை கெட்டது கரைக்குள் அடையாதோ***
***கட்டையினில் வைத்த பிணம் மாற்றுயிர் கொள்ளாதோ***
***உப்பளமதிற் பதர் விதைக்க விளையாதோ***
***உத்தரவு ஊமையனுரைக்க அறியானோ***
***அப்பிறவியர் குருடு இப்ப தெளியாதோ***
***திட்டமுடன் முத்துக்கள் நதிக்குள் மிதவாதோ***
***செப்பமுடன் நற்கிருபை தந்திடுவை அம்மா!***
***சீருலவு செட்டிநகர் வாழுமாதாவே'***

எனும் பாடலாகும்.

கண்ணகையின் அருள் உண்டானால் நடவாத காரியம் கூட நடக்கும் என்பது இப்பாடலின் பொருள் இதனை விட "கட்டாடி கண்ணப்பனுக்காயினுமிரங்கி" மழை பொழிய வேண்டும் என்பதாகவும் ஒரு பாடல் வரி அமைந்துள்ளது.

இதேபோன்று குளிர் காலத்தில் பாடுவதும் பரவசமூட்டும் நிகழ்வாகும். இந்நிகழ்வு அம்மனைக் குளிரவைக்கும் நோக்குடன் பண்டு தொட்டுப் பாடப்படுகிறது.

"சீர் பொருந்தும் ஐங்கரனே திருமாலின் மருகோனே"என்ற விநாயகர் காப்புடன் பல வித இசை நயங்களுடன் இப்பாடல்கள் பாடப்படும். இவ்வாறு குளிர்த்தில் பாடல்கள் பாடுகின்ற வேளையிலே கட்டாடியார் தனது கையில் உள்ள வேப்பிலைக் கொத்தினால் குளிர்த்திற் பானையைத் துளாவிய வண்ணம் இருப்பார்.

"ஆழிபுடை சூழும் என்ற காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்வணிகன் பின்போன மாதே குளிர்ந்தருள்வாய்" பாடல் வந்தவுடன் முதலாவது தடவையாகக் குளிர்த்திப் பானையுள் இருந்து வேப்பங்குழையினால் தோய்ந்த தீர்த்தத்தினை மூலஸ்தான அம்மனைக் குளிராக்கும் பாவனை காட்டிய பின் தனது விலாப்புறமுள்ள அம்மனுக்குக் குளிர்த்தியாட்டும் வகையிலே தெளிப்பார். இதைத் தொடர்ந்து பாடப்படும் பாடல்களில் "குளிர்ந்தருள்வாய்" என்ற சொற்றொடர் பாடப் படும் போது, மேற்கண்டவாறே செய்வார். பின்னர் இடம் பெறும் பாடல்களில் "குளிர்ந்தருள்வாய்" என்ற சொற்றொடர்

(தொடர்ச்சி பக்கம் 32)



# சித்திரா பௌர்ணமி

ஆசிரியர் கம்பநேசன் அ.வாசுதேவா
அமைப்பாளர்
அகில இலங்கைக் கம்பன் கழகம்

சைவர்களது வாழ்வியலில், மிக மிக இன்றியமையாது பேணப்பட்டு வருகின்ற, விரதங்களுள் ஒன்றாக விளங்குவது சித்திரா பௌர்ணமி விரதம். தாயை இழந்த ஒவ்வொருவரும் தங்கள் தாயை மனதில் நினைந்து, அவருக்குச் செய்யும் நன்றியாகவும், கடமையாகவும் இவ் விரதத்தை மேற்கொள்வர்.

சித்திரை மாதத்தில் வருகின்ற பௌர்ணமித் திதியோடு சித்திரை நடசத்திரமும் கூடிய சிறப்பிற்குரிய நாள் இந்நாள். இந்நாளில் மேற்கொள்ளப்படும் விரதம் என்பதால், இவ் விரதம் சித்திரா பௌர்ணமி எனப் பெயர் பெறலாயிற்று.

ஒரு ஆண்டில் மிகவும் ஒளி கூடிய மாதமாகக் கருதப்படும் மாதம் சித்திரை மாதம். அம்மாதத்தில் மிகவும் ஒளிகூடிய நாளாகக் கணிக்கப்பட்டுள்ள நாள், சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமித் திதியும் கூடிய இந்நாள். இந்நாள் எம் பண்டைய காலத்தில் மிகவும் முக்கியமான நாளாக கருதப்பட்டு வந்துள்ளது. இந்நாளில் இரவு நிலவொளியில் ஊரின் நடுவே அனைவரும் கூடி, பஞ்சாங்கம் படித்து அந்த ஆண்டுக்கான, விஷேட நிகழ்வுகளைக் குறித்துக் கொள்வர்.

அது போலவே அறிய வேண்டிய அரிய வேறு பல ஏடுகளையும் படித்துத் தெரிந்து கொள்வது இந்நாள் வழக்கம். ஆரோக்கியமான ஒளி நாள் என்ற வகையில் இந்நாளின் நிலவொளி தம் மேனியில் படவேண்டும் என்று இந்நிலவை எம் பண்டைய மக்கள் அனுபவித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. இரவு நிலவு காலித்த பின் நெய் விளக்கேற்றிச் சிவனையும், சந்திரனையும், சித்திரபுத்திரனையும், மலையையும் இந்நாளில் வழிபாடு செய்வது பண்டைய வழக்கம். திருவண்ணாமலையில் இவ்வழிபாடு சிறப்பாய் முன்னெடுக்கப் படுகிறது. அஸ்டலிங்க வழிபாடும் இந்நாளில், சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய வழிபாடு ஆகும். பால் சேர்க்காது செய்யப்பட்ட உணவு வகைகளும், சித்திர அன்னங்களும் இந்நாளில், சிறப்பாகப் படைக்கப்பட வேண்டிய நைவேத்தியங்களாகும். புத்திரப் பேற்றை விரும்புவோர் பின்பற்றத்தக்க, விரதமாக இவ்விரத நாள் சொல்லப்பட்ட போதும், இறந்த தாயை நினைந்து கடைப்பிடிக்கும் விரதம் என்பதே, இவ்விரதத்தின் தனிச் சிறப்பாகும். இந் நாளில் தாயை இழந்த ஆடவர்கள் நீர் நிலைக்குச் சென்று நீராடி, இறந்த தாயை நினைந்துத் தர்ப்பணம் செய்வர். தாயை இழந்த பெண்கள் தர்ப்பணம் செய்யாது வீட்டில் தம் விரதத்தை அனுட்டிப்பர். தாயாரின் படத்திற்கு மலரிட்டு, ஆசாரமாகச் சமைக்கப்பட்ட உணவு வகைகளைப் படைத்து, வணங்குவதும் அன்றைய நாளில் குடும்பத்தவர்கள் உறவினர்களோடு இணைந்து, உணவை உண்ணுவதும் பொதுவான வழக்கம், பொதுவாகத் தாயார் இறந்து ஓராண்டு முடியுமுன் இவ் விரதத்தை அனுட்டிப்பதில்லை.

ஆதிகாலத்தில் இத்தினத்தில் விரதம் இருந்து, கோயில்களிலும் ஏனைய புனிதமான பொது இடங்களிலும், கஞ்சி காய்ச்சி அனைவர்க்கும் வழங்கி மகிழ்வர். இந்நாளில் சித்திரபுத்திரனார் கதையைப் படிப்பதும், பெருவழக்காகப் பின்பற்றப்பட்டு வந்தது. பின்னாளில் சிவனுக்குரிய சிறப்பான நாளாகவும் இறந்த தாயை நினைவுகூரும் பிதிர் நாளாகவும் மாறி வந்துள்ளது.

## குரவைக் கூத்து

சித்திரா பௌர்ணமி நன்னாளில் குரவைக் கூத்தாடும் வழக்கமும், முற்காலத்தில் காணப்பட்டு வந்துள்ளது. மலைக்கூத்து, தெற்றியாடல் என்ற பெயர்களால் வழங்கப் பட்டு வந்த, “குரவைக் கூத்து” எனும் கூத்து, போர் தொடங்கும் சூழ்நிலையிலும், அச்சம் மிகுந்த காலங்களிலும் அவ் அச்சத்தில் இருந்து விடுபட, கிராமத்து மக்களால் ஆடப்பட்டு வந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் மதுரையில் ஆயர் சேரியில் கண்ணகி துணுக்குற்றிருந்தவேளை, அவளைத் தேற்றி மகிழ்விக்க ஆயர்குலப் பெண்கள் குரவைக் கூத்தாடினர், என்ற குறிப்பு இடம் பெற்றிருப்பது கவனிக்கத் தக்கது.

## வசந்தவிழா

வசந்தவிழாக் கொண்டாட்டமும் சித்திரா பௌர்ணமி தினத்தோடு தொடர்பு பட்டது. வசந்தகாலத்தின் வரவைக் கொண்டாடும் முகமாகப் பண்டைக்கால மக்களால் கொண்டாடப்பட்டு வந்த 'வசந்தோற்சவம்' என்ற விழா, தமிழர்களின் வாழ்வில் சிறப்பான நாளாகக் கருதப்பட்டு வந்த சித்திரா பௌர்ணமி நாளோடு தொடர்புபட்டுக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

## சித்திரபுத்திரன் கதை

சித்திரா பௌர்ணமி தினத்தில் சித்திரபுத்திரன் கதையைப் படித்து வரும் வழக்கம், தொன்று தொட்டு இன்று வரை நடைமுறையில் உள்ளது. சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில், சித்திரபுத்திரன் தோன்றிய காரணத்தால் இவரது வரலாற்றுக் கதையைக், கதையாகப் படிப்பது வழக்கமாக உள்ளது. ஆதிகாலத்தில் சிவபிரானால் பலகையொன்றில் சித்திரமாக வரையப்பட்ட அழகிய புத்திரன் உமையவளின் விருப்பிற்கிணங்க, சிவபெருமானின் மூச்சுக்காற்று ஊட்டப் பெற்று உயிர் பெற்றெழுகிறான். சிவனைப் போலவே அழகுறக்காட்சி தந்த அவனது கரங்களில் ஏடும் எழுத்தாணியும் விளங்கு கின்றன. உலகெங்கிலும் உள்ள ஜீவராசிகளின் பாவக் கணக்குகளைச் சரிபார்த்து அவரவரைத் தண்டிக்கும் பாரிய பொறுப்பிற்குத் துணை வேண்டும் எனக் கேட்ட யமதர்மராஜனுக்கு உதவியாளாக உடன் இருந்து உதவுமாறு சிவபிரான் பணிக்க அப்பணியை ஏற்று யமதர்மராஜனுக்கு, உதவி வருகிறார் இச்சித்திரபுத்திரனார். பேராற்றல் கொண்ட ஆயிரம் பேர் ஒன்றிணைந்து அசைத்தாலும், அசைக்க முடியாத ஏட்டைத் தன் கையில் வைத்திருக்கிறார். அதலம், சுதலம், பாதாலம் முதலிய அண்ட சராசரங்களிலும், வாழுகிற அத்தனை உயிர்களதும் பாவக் கணக்குகளை, அவ் உயிர்களின் தோளில் அமர்ந்தபடி அவதானித்து, அதற்குத்தக அவர்களுக்கான ஜென்மங்களை வகுத்து வருபவர் தான் இந்தச் சித்திரபுத்திரனார். இவரைச் சித்திரகுப்தன் என்றும் அழைப்பது வழக்கம்.

## தாயோடறுசுவை போம்

பெற்றதாயின் பெருமை உணர்ந்த பிள்ளைகள் தாயின் பிரிவின் பின் இவ்வுலகில் அவர்களுக்குண்டான வெற்றிடத்தை உணர்வர். எல்லாவிதமான பற்றுக்களையும் எளிதில் துறந்த பட்டினத்தடிகள் தாயன்பைத் துறக்கவொண்ணாது தவித்தார். தாயைப் பிரிந்த பின் அறுசுவை உணவை உண்டவர் இலர். அதனால் தான் 'தாயோடறுசுவை போம்' என்ற தொடர் வழங்கி வரலாயிற்று. உலகத்தின் ஆதார சுருதியாக விளங்குகிற தாயின் பெருமையைத் தரணிக்குணர்த்துகின்ற பெரு நாளாக விளங்கும் இந்நாள், உலகத்து உயிர்களின் நன்றியை வெளிக்காட்டும் பொன்னாள். இந்நாளில் தாய்க் குலத்தை வழிபட்டு உய்வு பெறுவோம்.

**சாதனை செய்க பராசக்தி"**

---

### 30ஆம் பக்க தொடர்ச்சி

பாடப்படும்போது மூலஸ்தானத்தை நோக்கி வேப்பங் குழை மூலம் தீர்த்தத்தினை அள்ளித் தெளிப்பார். பின்னர் வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதி நோக்கி எல்லாத் திசைகளிலும் இருக்கின்ற அடியார்கள் மீது தீர்த்தத் துளிகள் படும் வண்ணம் தெளித்து நிற்பார்.

"வாராய் புறாவே வளர்மதியைக் கை தொழுவோம்" என்ற பாடல் பாடப்பட்டதும் தீர்த்தம் தெளிப்பதை நிறுத்தி விடுவார். வழிபாடு முடிந்ததும் குளிர்த்திப் பானையினுட் கிடந்த சிலம்பு, அம்மாணைக்காய், என்பன வேறாக எடுக்கப் படும். காட்டாடியார் வெண்கலச்சங்கினால் வண்ணக்கு மாருக்கும், ஏடு படித்தோருக்கும் முக்கிய பிரமுகர்களுக்கும் தீர்த்தம் வழங்கி விட்டு அம்மனை மூலஸ்தானத்தினுள் கொண்டு போய்விடுவார். பின்பு பானையுள் இருக்கும் தீர்த்தம் புனிதமான முறையில் பக்குவமாக அடியார்களுக்கு வழங்கப்படும் இத் தீர்த்தத்தினை பருகுவதன் மூலம் நோய் பிணிகள் நீங்கி இன்பமாக வாழலாம் என்பது எமது பிரதேச மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இதேபோன்று வெண்கல உடுக்கு அடிக்கும் நிகழ்வும் மக்கள் மத்தியில் பரவசமூட்டும் நிகழ்வாகக் காணப்படுகின்றது தீராத நோய் பிணிகள் உள்ளவர்களும் பேய், பிசாசு, பில்லி, வஞ்சனை, சூனியம் தீர வேண்டியவர்களும் தமது நேர்த்திக் கடன்கள் நிறைவேற்ற வேண்டுமென விரும்புகின்றவர்கள், இங்கே மண்டியிட்டு நிற்பர். அற்புதச் சக்தி வாய்ந்த வெண்கல உடுக்கு, செட்டிபாளையம் கண்ணகை அம்மனுடைய தனித்துவச் சிறப்பு, ஆண்டு ஒரு முறை அதன் அருட்கடாட்சத்தினை அம்மன்அடியார்கள்அனுபவிக்கிறார்கள். இதனுள் இருக்கும் சூட்சுமத்தை அம்மனை யன்றி வேறு யாரும் அறியவல்லார்.

(தொடரும்)







19.03.2023 அன்று பூனாகலையில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனடியாக உதவி கிடைக்கக் கூடிய வகையில் மாமன்றம் நிதியுதவி செய்தது.



சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் 01.04.2023 அன்று பிரார்த்தனை மண்டபத்தில் பூசை வழிபாடுகளோடு அனுசரிக்கப்பட்டது.

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயக் கலாச்சார மண்டப அறிவிப்புப் பலகை. மாமன்ற நிதிப்பங்களிப்பில் தயாரிக்கப்பட்ட அறிவிப்புப் பலகை திறந்து வைக்கப்பட்டது.



## பரந்து பட்ட இடங்களில் களம் கண்ட கற்கை நெறிகள்

அகில இலங்கை இந்து மாமன்றமும் இந்து வித்தியா விருத்திச் சங்கமும் இணைந்து இலங்கையின் பெரும்பாலான கல்வி வலயங்களில் தமிழ் மாணாக்கர்களின் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்று தரங்களை உயர்த்த மேற்கொண்ட முயற்சியில் கொழும்பு, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு, களுத்துறை மாவட்டங்களில் கருத்தரங்குகளை, கல்விவலயப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் உதவியுடன் மிகவும் பாராட்டத்தக்க வகையில் முன்னெடுத்திருந்தார்கள்.



கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி



கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி



மத்துகமக் கல்வி வலயம்



துணுக்காய்க் கல்வி வலயம்



திருக்கோவில் கல்வி வலயம்



திருக்கோவில் கல்வி வலயம்



முல்லைத்தீவுக் கல்வி வலயம்



முல்லைத்தீவுக் கல்வி வலயம்



வவுனியா வடக்கு கல்வி வலயம்



வவுனியா வடக்கு கல்வி வலயம்



வளவாளர்கள் குழு

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. DOP/NEWS/21/2023



09.01.2023 அன்று சேர் பொன். அருணாசலத்தின் 99வது நினைவு தின நிகழ்வின் போது மாமன்றத் தலைவர் திரு மா. தவயோகராஜா, பொதுக்காரியதரிசி திரு வே. கந்தசாமி, பொருளாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை ஆகியோர் பிரசன்னம். இவர்கள் முறையே சேர் பொன். அருணாசலம் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களாகவும் சேவை ஆற்றுகின்றனர்.



மாமன்றப் பேராளர்களும் மாமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்ட முகாமைப் பேரவைக் கூட்டம் 24.01.2023 அன்றும் ஆண்டுப் பொதுக் கூட்டம் 25.02.2023 அன்றும் நடைபெற்றது.



26.02.2023 அன்று அமரர் க. நீலகண்டனின் நினைவுப் பேருரை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் அவர்களால் வழங்கப்பட ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாசிகளோடு மாமன்றத் தலைவர் திரு. தவயோகராஜா தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.